Registered as a Newspaper

பக்கங்கள் 8

விலை ரூபா: 5-00

Nallur Branch

ஈழநாதம்

The Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 17 31- 05 - 1994 செவ்வாய்க்கிழமை ஓசை 102

## 60 வெளிநாட்டு பணியாளர் இலங்கையில் பதவி வகிப்பு

இலங்கையில் தற்போது பல்வேறு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் பணிபுரிவதாக கணிப்பிடப்பட்டுள்ளது- சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 38வெளிநாட்டவர்களை வடக்கு - கிழக்கு மற்றும் அனுராதபுரம் பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்தியுள்ளது; சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணத்திலேயே அதிக வெளிநாட்டவர்களை ஈடுபடுத்தியுள்ளதாகவும் யாழ்ப்பாணத்தில் ஆறு வெளிநாட்டவர்கள் இவ்வாறு பணி புரிவதாகவும் இச் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். ஏனைய வெளிநாட்டவர்கள் மன்னார், திருமலை, மட்டக்களப்பு, அனுராதபுரம்,

(6ஆம் பக்கம் பார்க்க)

# மாகாணசபை மீள் புனரமைப்பு

# இனப்பிரச்சினைக்கான தீர்வு

## இளைஞர் சுட்டுக்கொலை

வாழைச்சேனை புதுக்குடியிருப்பு பகுதியில் கடந்த வெள்ளியன்றிரவு இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இரவு 7. 30 மணியளவில் இவரது வீட்டுக்கு வந்த சிலர் இவரை அழைத்துச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது. தம்பிஐயா சிவமாறன் என்பவரே இச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

## அமீட்டுக்கு பதவி

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குவதற்காக ஐ. தே க. தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியை துறந்த எம். எச் அமீட்டுக்குஇலங்கை-லிபியா கைத்தொழில் அபிவிருத்தி சபைத் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது

காமினிக்கு பாராளுமன்றம் செல்ல வழிவிட்டமைக்கான ஓர் லஞ்சமாக இப் பதவி வழங்கப்பட்டதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்

## தனியாருக்கு முன்னுரிமை சுதந்திரக்கட்சி வழங்கும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாதாரத்திட்டத்தின் கீழ் முன்னணிப் பங்கை வகிக்குமாறு தனியார் துறையினர் கோரப்படுவார்கள் எனக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறிசேனநாயக்கா தெரிவித்தார்.

கடந்த வாரம் இடம்பெற்ற கட்சியின் தேசிய நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் பேசிய அவர் எமது கட்சியின் திறந்த பொருளாதார கொள்கை நியாயம விலையில் பொருள்களை மக்கள் கொள்வனவு செய்ய உதவும் கூடுதலான அளவு வெளிநாட்டு முதலீட்டை நாம் ஊக்குவிப்போம். ஆனால் அத்தகைய முதலீடுகள் மிகுந்த கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படும்.

இனப்பிரச்சினைக்கு சுதந்திரக்கட்சி அரசு அதிக முன்னுரிமை கொடுத்து அதைத் தையாளும் சகல தமிழ்க் கட்சிகளுடனும் நாம் பேச்சு நடத்துவோம் எனவும் தர்மசிறிசேனநாயக்கா மேலும் தெரிவித்தார்.

## மாணவர் எழுச்சிக் கீதம்

கல்வித் திணைக்களம் வலயம் 02ஐச் சேர்ந்த சங்கீதம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தத்தமது கோட்டத்தைச் சேர்ந்த சங்கீத முதன்மை ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு மாணவர் எழுச்சி கீதத்தைப் பயின்று மாணவர்களுக்குக் கற்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். சங்கீத முதன்மை ஆசிரியர்களுக்கு வேண்டிய அறிவுறுத்தல்களை திரு சு. கணபதிப்பிள்ளை பி.க.ப, சங்கீதம் வழங்கியுள்ளார்.

## திட்டம் தயாராகி வருகிறதென சந்திரிகா குமாரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழ் மக்களுக்கு கூடிய உரிமைகளை வழங்கக் கூடிய முறையில் மாகாணசபையை மீள் புனரமைப்பு செய்ய வேண்டும் என்றும், இனப்பிரச்சினையை அரசியல் தீர்வு மூலமே தீர்க்க முடியும் எனவும் மேல்மாகாண முதல் அமைச்சரும், சுதந்திரக்கட்சியின் பிரதித் தலைவியுமான சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக தற்போது பேச்சுவார்த்தைகளில் தான் ஈடுபட இருப்பதாகவும் தற்போது ஓரளவு விடயங்களை மையமாக வைத்து தீர்வினைத் தயாரித்து வருவதாகவும் இது தொடர்பாக தமிழ் குழுக்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதாகவும் தெரிவித்துள்ளார்,

தமது தலைமையின் கீழ் இயங்கும் கட்சியில் தமிழ் மக்கள் பூரண நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தற்போதைய அரசாங்கத்தை விட தமிழ் மக்களுடன் நல்லுறவை கொண்டிருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

## சிறிலங்கா பிரதமருடன் பேச வாய்ப்பு ஏற்படுத்தித் தரவும்

### லுவிஸ்ஹோம் மேயர் சின்னமணி கோரிக்கை

(கொழும்பு)

லண்டனில் உள்ள சிறிலங்கா தூதரகம் சிறிலங்கா பிரதமருடன் சந்திப்பொன்றை மேற்கொள்ள வாய்ப்புசெய்து தரவேண்டும் இதன் பின்னர் தேவையேற்படின் மீண்டும் யாழ் பாணம் செல்ல எண்ணியுள்ளேன் என லண்டன் லுவிஸ்ஹோம் நகர மேயரும் இலங்கையருமான சின்னமணி தெரிவித்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி லண்டன் ஹவுஸ் ஓப் கொமன்ஸ் குழு அறையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதனிடையே மேயர் சின்னமணி ஏற்கனவே விடுத்த கோரிக்கைக்கு அமைய லேஸர் இயந்திரத்திற்கான பணத்தில் பெரும்பகுதி திரட்டப்பட்டுள்ளது யாழ்மருத்துவமனைக்கு

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## ஜனாதிபதி, பொதுத்தேர்தல் நாட்கள் குறித்து சர்ச்சை

(கொழும்பு)

இலங்கையின் இரு பிரதான கட்சிகளும் இந்த வருட இறுதியில் இடம்பெறவிருக்கும் தேர்தல்களுக்காக மும்முரமாகத் தம்மைத் தயார்படுத்திவரும் இவ்வேளையில் ஜனாதிபதித் தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தலையும் ஒரே நேரத்தில் நடாத்துவதா அல்லது ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதா என்பது குறித்த சர்ச்சை இப்பொழுது எழுந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்

தற்போதையபாராளுமன்ற காலம் 1995 மார்ச் மாதத்துடன் முடிவடைகிறது

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## கடற்படை தாக்குதல் 5மீனவரைகாணவில்லை

### சுழிபுரம் கடற்பரப்பில் சம்பவம்

(தொல்புரம்)

சுழிபுரம் திருவடிநிலை இறாத்தலடியைச் சேர்ந்த கதிரமலை விக்கினேஸ்வரன் வசித்துவந்த சந்தையா

## மே மாதத்தில் படையினர் இறப்புக்கள் அதிகரிப்பு

### சிறிலங்கா பாதுகாப்புவட்டாரங்கள் தகவல்

## இரு தேர்தல்களையும் ஒன்றாகநடத்துவதுசிறந்தது

## சிறிலங்கா பாதுகாப்புவட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

இவ் வருடம் ஆரம்பத்தில் இருந்து மே மாதம் 28ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வட கு-கிழக்கு மாகாணத்தில் எண்பத்தி ஆறு சிறிலங்கா படையினர் பலியானதாகவும் இருபத்தி இரண்டு பேரைக் காணவில்லைஎனவும் சிறிலங்கா பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் அறுபதுபேர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒருவர் விமானப்படையைச் சேர்ந்தவர் என்றும் இருபத்தி நான்குபேர் பொலிஸ் படையைச் சேர்ந்தவர்கள் என்றும் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் காணாமல் போனவர்களில் இருவர் இராணுவத்தை சேர்ந்தவர் என்றும் மேலும் இருவர் பொலிஸ் பிரிவை சேர்ந்தவர்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# தாண்டிக்குளம் ஊடாக மன்னாருக்கு பொருள்

### அரசாங்க அதிபர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

வவுனியா - மன்னார் வீதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அந்த வீதியால மன்னார் பெருநிலப்பரப்பிற்கும், மடு அகதி முகாமிற்கும் உணவு, மற்றும் மருத்துவப் பொருள்களை எடுத்துச் செல்லும் வாகனங்களுக்கு அனுமதி மறுத்திருப்பதனால் தாண்டிக்குளம் ஊடாக சுற்றி மன்னார் பெருநிலப்பரப்பிற்கு இவற்றை எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் அரசாங்க அதிபர் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது

இதே சமயம், மடு அகதி முகாம் மக்களுக்குரிய உணவு, மற்றும் மருத்துவப் பொருள்களை ஏற்றிக்கொண்டு லொறிகள் தாண்டிக்குளம்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

### இந்தியாவிலிருந்து யாழ். திரும்பிய

# 45 குடும்பங்களுக்கு நிவாரணப்பணம் இல்லை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து திரும்பி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ள 45 குடும்பங்களுக்கு நிவாரணப் பணம் வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டது

இந்தக் குடும்பங்க[illegible] ஆம் ஆண்டுக்குப் பின்[illegible] தியாவிற்கு சென்று தி[illegible] டைந்த போதிலும் சுய விருப்பத்தின் பேரில் விமானத்தில் இலங்கை வந்தடைந்தவர்கள்.

இதன் காரணமாக இந்தக் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே இருக்கின்றன எனக் கருதப்பட்டு தமிழ் நாட்டிலிருந்து மீளத் திரும்பி வந்[illegible]வர்களுக்கான நிவாரணப் [illegible]ம் வழங்கப்படமாட்டாது [illegible]த் தெரிவிக்கப்பட்டது.

( 6 ஆம் பக்கம் பார்க்க)

(தெல்புரம்)

சுழிபுரம் திருவடி நிலை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையின் சிறியரக விசைப்படகில் ரோந்து வந்த கடற்படையினர் தாக்கியதில் ஐந்து மீனவர்கள் காணாமல் போயுள்ளார்கள் என அஞ்சப்படுகிறது.

நேற்று நள்ளிரவு 1.10மணியளவில் சுழிபுரம் திருவடி நிலைக் கடற்பரப்பில் இடம்பெற்ற இத் தாக்குதல் சம்பவத்தின் போது தொழிலுக்காக சென்ற சுழிபுரம் மேற்கு இறாத்தலடியைச் சேர்ந்த கதிரமலை விக்கினேஸ்வரன் (வயது 24), காரை நகரில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது சுழிபுரம் மேற்கில் வசித்து வந்த சந்தையா சிவநேசன் (வயது 26), சின்னையா மயில்வாகனம் (வயது 38), செல்லையா

(6ஆம் பக்கம் பார்க்க)

# சிறியரக விசைப்படகில் வந்த கடற்படையினர் தாக்கினர்

### தப்பி வந்த மீனவர் தகவல்

(தொல்புரம்)

நாம் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை காரை நகர் பக்கமாகவிருந்து சிறியரக விசைப்படகில் ரோந்து சுற்றி வந்த சிறிலங்கா கடற்படையினர் தமது படகிலிருந்து சரமாரியன துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்த

(6ஆம் பக்கம் பார்க்க)

# புதிய தளபதி நியமனத்தை அடுத்து விமானப் படைக்கு செலவு அதிகரிப்பு

(கொழும்பு)

விமானப்படைத் தளபதியாக ஒலிவர் ரணசிங்க நியமிக்கபட்டதைத் தொடர்ந்து விமானப்படையினரின் செலவுகள் அதிகமாகியிருக்கிறது இவ்வாறு கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள வார இதழ் ஒன்றுக்கு விமானப் படையின் உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

விமானப்படையின் புதிய தளபதியான ஒலிவர் ரணசிங்க திருகோணமலைப் பிராந்திய அதிகாரியாக செயலாற்றிய போது விமானப்படை அதிகாரிகளுக்காகவைச்செலவு நிதியம் என்ற வகையில் ஒன்றை உருவாக்க திட்டமிட்டிருந்தசர் எனினும் விமானப்படை அதிகாரிகளின் ஒத்துழைப்பும், அமைச்சின் அநுசரணையும் இல்லாமையினால் இத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இதேவேளை விமானப் படையினரிடம் இருக்கும் பழுதடைந்த விமானங்களை திருத்துவது தொடர்பாக முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

# யாழ். இந்து மாணவர்கள் இன்று முதல் பகிஷ்கரிப்பு

### இரு நேரப் பாடசாலைக்கு ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரிமாணவர்கள் இன்று முதல் பாடசாலையைப் பகிஷ்கரிக்க உள்ளனர் ஒரு நேரப்பாடசாலையாக இயங்க வேண்டும் என்று கோரி இன்று முதல் இந்தப் பகிஷ்கரிப்புப்போராட்டத்தை நடாத்துவது என்று இக்கல்லூரி மாணவர்கள் நேற்று தீர்மானம்எடுத்துள்ளனர் இத்தீர்மானத்துக்கு இணங்க இன்று முதல் பாடசாலையை முழுமையாக பகிஷ்கரிக்கப் போவதாக மாணவர் பிரதிநிதிகள் எனக்குத் தெரிவித்தனர்

கல்வித் திணைக்களம் அறிமுகப்படுத்திய இருநேரப்பாடசாலைத் திட்டத்தை இப்பாடசாலையின் அதிபர் உடனடியாக நடைமுறைப்படுத்தவில்லை தற்போது அதிபர் இடைக்கால விடுப்பில்வெளியூர்சென்றுள்ளார் இவ்வேளை கல்வித் திணைக்களம் இருநேரப் பாடசாலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி பல அழுத்தம் போட்டதாகத் தெரிகின்றது இவ்விடயம் குறித்து வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளருக்கும் இக்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# ஒன்றாகநடத்துவதுசிறந்தது

### பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் ஒரே நேரத்தில் நடத்துவதே நல்லது என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களும் விருப்பம் தெரிவித்துள்ளன

அவ் வட்டாரங்கள் மேலும் கருத்து வெளியிடுகையில் தேர்தலுக்கு முன்பும் பின்பும் தோன்றும் நிலைமைகளை சமாளிப்பதற்கு பாதுகாப்பு படையினருக்கு இது உகந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

# நவம்பர் ஜனாதிபதி தேர்தல் டி. பி. விஜேதுங்க முடிவு

(கொழும்பு)

சிறிலங்காவின் ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் எதிர் வரும் அக்டோபர் மாதத்தின் பிற்பகுதியில் அல்லது நவம்பர் மாத முற்பகுதியில் நடத்தப்படலாமென ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா கட்சியின் கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்தார்

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. க வெற்றிபெற்றால் மட்டுமே பாராளுமன்றத் தேர்தலிலும் கட்சி வெற்றி பெற முடியுமெனவும் எனவே கட்சியிலுள்ள பிளவுகள் அனைத்தும் சீர்செய்யப்பட்டு கட்சியமைப்பு பலப்படுத்தப்படவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எதிர்வரும் ஆறாம் திகதி சிகிச்சைக்காக சிங்கப்பூர் செல்ல இருப்பதாகவும், அவரது உடல்நிலை குறித்து வைத்தியர்கள் திருபதி தெரிவித்தால் மட்டுமே அவர் [illegible]திபதி தேர்தலில் வேட்பாளராக நிற்பார் எனவும் திருமதி சந்திரிகா. குமாரணதுங்கா கூறியுள்ளார் அவ்வாறு திருமதி சிறிமாவோ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடாத இட

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வீரச்சாவு



### லெப். லவன் (கிள்ளிவளவன்)

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் மல்லிகைத்தீவு என்னும் இடத்தில் கடந்த 28-ம் திகதி இரவு 7. 15 மணியளவில் சிறிலங்கா

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்

**தண்ணீர் தாங்கி**

1) 8×8×8 கன அடி சதுரம், 2) 4×4×4 கன அடி சதுரம், 3) 2 000 கலன் கொள்ளும் வட்டமானது ஆகிய தண்ணீர்த் தாங்கிகள் விற்பனைக்கு உள்ளன. தொடர்பு:- 525/2, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் (சி-9551)


## எறிகணை வீச்சு

காரைநகர் ஊரிமுனை காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவலரண்களிலிருந்து சனியன்று காலை 8 50 மணியளவில் மூளாய், பொன்னாலை, கொத்தத்துறை பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இச்சம்பவத்தின்போது உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத்தெரிய வருகின்றது. (41)


## உங்கள் அதிர்ஷ்டம்

29-05-94 அன்று குலுக்கப்பட்ட கரணவாய் தெற்கு விவேகானந்தா சனசமூகநிலைய அதிர்ஷ்ட லாபச் சீட்டு முடிவுகள்

1 ம் பரிசு 0753
2 ம் பரிசு 3333
3 ம் பரிசு 0113

ஆறுதல் பரிசுகள்

1) 0106 2) 0111
3) 0838 4) 2308
5) 2321 6) 2406
7) 3570 8) 2008
9) 2007 10) 3768

அனைவருக்கும் எமது நன்றி

-நிர்வாகம்-

(8421)


## யாழ் மாவட்டச் சூழல் பாதுகாப்புக் குழுவின் அறிவித்தல்

உலகச் சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு யூன் மாதம் 05ஆம் திகதியிலிருந்து யூலை மாதம் 05ஆம் திகதி வரை இம்மாவட்டத்தில் சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு மாதம் கொண்டாடப்படும். இது சம்பந்தமாகப் பின்வரும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன:-

- 06.06.94ஆம் திகதி திங்கட்கிழமை ஒவ்வொரு பாடசாலையிலும், காலை இறை வணக்கத்தைத் தொடர்ந்து ஒரு மணித்தியாலத்திற்குச் சூழல் பாதுகாப்புச் சம்பந்தமாகக் கருத்துரைகளை மாணவர்களுக்கு வழங்க அதிபர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.
- பாடசாலை மாணவர்கள் மத்தியில் சூழல் சம்பந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வரையில் கட்டுரைப் போட்டிகளும், ஓவியப்போட்டிகளும் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும்.
- இதே நோக்குடைய இவ்வாறான போட்டிகள் பிரதேசச் செயலர்களினால் பிரதேசச் செயலக மட்டத்தில் 19 06.94ஆம் திகதி நடாத்தப்படும்.
- இவ்விரு போட்டிகளும் 15 வயதுக்கு மேற்பட்டோருக்கெனவும் 15 வயதுக்குக் கீழ்ப்பட்டோருக்கெனவும் இரு பிரிவுகளாக நடாத்தப்படும்
- இப்போட்டிகளில் விரும்புவோரெவரும் பங்கு பற்றலாம் விரும்புபவர்கள் 10 06. 94ஆம் திகதிக்கு முன்னதாகத் தத்தம் பிரதேசச் செயலர்களோடு தொடர்பு கொள்ளவும்.
- பிரதேசச் செயலர் மட்டத்தில் நடாத்தப்படும் கட்டுரைப் போட்டியிலும், ஓவியப் போட்டியிலும் முதல் ஐந்து இடங்களைப் பெறுபவர்கள் மத்தியில் 26 06 94ஆம் திகதி மாவட்ட ரீதியிலான போட்டி நடாத்தப்படும்.
- சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய சுலோகங்களை அனுப்ப விரும்புவோர் 10 06 94ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் சுலோகங்களை யாழ்ப்பாணம் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பலாம். இதற்கும் பரிசுகள் வழங்கப்படும்.
- போட்டிகள் சம்பந்தமான விபரங்களைக் கல்வித் திணைக்களத்திலும் பிரதேச செயலர்களின் காரியாலயங்களிலும் யாழ்ப்பாணம் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.
- போட்டிகளிலே வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா 03-07-94ஆம் திகதி யாழ்நகரில் இடம் பெறும்.

ஒப்பம் கா. மாணிக்கவாசகர்
தலைவர், யாழ்மாவட்டச் சூழல் பாதுகாப்புக் குழு.
அரசாங்க அதிபர்.
யாழ்ப்பாண மாவட்டம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள்.

சுந்தரம் டிவகலாலா
செயலாளர், யாழ் மாவட்டச் சூழல் பாதுகாப்புக்குழு.
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,

(சி-9558)


## தேவை

கோண்டாவில் நூல் நிலையம் ஒன்றிற்கு அனுபவம் மிக்க தமிழ், ஆங்கில, தட்டெழுத்தாளர் & சுருக்கெழுத்தாளர் தேவை.

தொடர்பு :-
விள. இல: 335,
மே/பா. ஈழநாதம்,
மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(8424)


## 3-ம் ஆண்டு நினைவுகள்

அமரர்

### வைத்தியக்கலாநிதி ஜே.பி.சி. பிலிப்ஸ்

**31 . 5 . 94**

கத்தோலிக்க மறைபணிக்கே வளமானவன்
''பற்றிக்சின்'' மேம்பாட்டிற்கே தூணானவன்
வைத்தியக் கல்விக்கே நிலை அமைத்தவன்
நுண்கலைகள் வளர்ந்திடவே மனமானவன்
விளையாட்டுக்கள் உயர்ந்திடவே துணையானவன்
உதைபந்தாட்டம் வளம்பெறவே தலையானவன்
மக்களுக்கு பணிகள் செய்தே நிலையானவன்

இறைவா நீர் விரும்பும் பணி அதனை
நிறைவாக்கியே முடித்த டாக்டர் பிலிப்ஸ்
பெருமகனை நின்பதமே ஏற்றருள்வீர்.

குறிப்பு:

டாக்டர் பிலிப்ஸ் அவர்கள் நினைவாக சிறுவர் நூலகம் ஒன்றினை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம். இதற்கான ஆலோசனைகள், உதவிகளை நண்பர்கள் நலன் விரும்பிகளிடமிருந்து ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

அமரர் வைத்தியக்கலாநிதி
ஜே. பி. சி பிலிப்ஸ்
ஞாபகார்த்த சபை
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு
அகிலன் பாதணி நிலையம்
12/1, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி 9556)

## நினைவு கூருகின்றோம்...

## 31.05.1994

1985ஆம் ஆண்டு இதேதினத்தில அம்பாறை-அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**நகுலன்** (இளையதம்பி பாக்கியராசா - காரைதீவு-அம்பாறை)

திருமலை - மூதூர், தங்கநகர்ப் பகுதியிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு கந்தளாய் பாலத்தருகே வைத்து கொலை செய்யப்பட்ட,

- **தீபன்** (செல்வராஜா நவரட்ணராஜா (நவம்) கிளிவெட்டி - திருமலை)
- **குமார்** (சதாசிவம் திருக்குமார் - கிளிவெட்டி- திருமலை)
- **மயூரன்** (மகேந்திரன் மயில்வாகனன் - கிளிவெட்டி - திருமலை)
- **ரங்கா** (விஸ்வலிங்கம் குணசேகரம் - தங்கநகர்- திருமலை)
- **பாஸ்ரர்** (மயில்வாகனம் குமாரகுலசிங்கம் - தங்கநகர் திருமலை)
- **ராஜு** (அந்தோனிப்பிள்ளை ராஜேந்திரன்- திருமலை)
- மகுலேந்திரன் (கிளிவெட்டி - திருமலை)
- பஞ்சாட்சரம் சுந்தரலிங்கம் (தங்கநகர்- திருமலை)
- மயில்வாகனம் - அமிர்தகுலசிங்கம் (தங்கநகர் - திருமலை)
- இராசையா லிங்கம் (தங்கநகர் - திருமலை)
- நந்தசாமி (இராசையா நந்தசாமி - தங்கநகர் - திருமலை)

இதே சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட 28 தமிழர்கள்.

திருமலை நிலாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட குழந்தை, பெண்கள் உட்பட 09 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மாமுனையில் 2வது நாளாக இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர்-

**லெப். குலக்சன்** (கணபதிப்பிள்ளை சிறிரங்கநாதன் - தாளையடி - யாழ்)

**சூரி** (கறுப்பையா செல்வகுமார் - தாளையடி - யாழ்)

1991-ம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**ராகுலன்** (குமாரசாமி குகானந்தன் - ஜெயந்திநகர் -கிளிநொச்சி)

திருமலை-உப்பாற்றுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் படகில் பயணம்செய்து கொண்டிருந்தோர் மீது மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புநோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகளில் வவுனியா- தாண்டிக்குளம் தடைமுகாம் பகுதியில் வைத்து சிறிலங்காப்படையினரால் கடத்திச் செல்லப்பட்டு காணாமற்போன பல தமிழிளைஞர்கள்.

1992-ம் ஆண்டு யாழ்-கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**முகிலன்** (பாலசிதம்பரநேசன் தேவராசா -நவாலி தெற்கு-மானிப்பாய்)

முல்லைத்தீவு, 5-ம் கட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**அறிவொளி** (நாகரத்தினம் கிருபா-உருத்திரபுரம்- கிளிநொச்சி)




"உலகம் எம்மை முந்தித்தான் செல்கின்றது
என்ன செய்யலாம்"

மனம் தளராதீர்கள்!!

"கால ஓட்டத்திற்கேற்ப
நீங்களும் நகரமுடியும்!"

ஆமாம் ... படியுங்கள்...!



ஆமாம்... படியுங்கள்...!

# உலக உலா

## திங்கள்தோறும் அழகு தமிழிலே வெளிவருகின்றது

உலகின் பல்வேறு பாகங்களில் இருந்தும்
மூலை முடுக்குகளில் இருந்தும் புதிய
தகவல்களை அலசி வரும்
ஒரே ஒரு தமிழ்ச் சஞ்சிகை

# உலக உலா

மே மாதம் உலகை வலம் வந்து வீட்டீர்களா...?
இன்னுமென்ன தாமதம்...?
இதோ வந்து விட்டது ★ உலக உலா ★

முகாமைத்துவம்:- தரவுகள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல்,
சமூகவியல்:- சமயம் ஏற்படுத்திய பிரிவினை
விஞ்ஞானமும்
தொழில்நுட்பமும்:- மின்னுவதெல்லாம் இரசாயனமல்ல
சுற்றுச் சூழல்:- கிவியின் கடைசி அறைகூவல்
மனிதவியல்:. லூசியின் பேரன்.
குற்றவியல்:- விமானக் கடத்தல்
புதியதோர் ஆழமான மலையிடுக்கு
ஆகா . . . அற்புதம்!!

இன்னும் உலக விவகாரங்கள், பல்திணைப் பகுதிகளையும் சிறப்புடன் உள்வாங்கி

வெளிவந்துள்ளது- **உலக உலா**

✻ யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்துப் புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-9552)

---

திய,
அறிவொளி (நாகரத்தினம் இருபா-உருத்திரபுரம்-கிளிநொச்சி)

யாழ்-செல்லங்கலட்டிப் பகுதியில் வீடுபார்க்கச் சென்றபோது சிறிலங்கா ராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 02 பொதுமக்கள்.

1993-ம் ஆண்டு வவுனியா - நொச்சிமோட்டைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவம் மற்றும் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.ஜெக்சன்-காவலன்** (கந்தையா சுப்பிரமணியம்-பம்பைமடு-வவுனியா)
**லெப் விஜு-விக்கொடியன்** (தனபால் சுரேஸ்-ஓமந்தை-வவுனியா)
**லெப்.யாசான்-ஜேசுமணி** (கந்தையா சக்திவேல்-சேமமடு-வவுனியா)
**லெப்.நிலான்-கந்தபெருமாள்** (சண்முகம் யோகராஜா-கோணாவில்-கிளிநொச்சி)

வவுனியா-நொச்சிமோட்டையில் சிறிலங்கா இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பலியான பிரயாணிகளான 09 தமிழர்கள்-

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

✻ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9550)

---

## முக்கிய அறிவித்தல்

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட வர்த்தகர்களுக்கான அறிவித்தல் 31-5-1994 ஆம் திகதி எமது வருடாந்த பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் 22 6-1994 ஆம் திகதி புதன்கிழமை பிற்போடப்பட்டுள்ளது என்பதை வர்த்தகர்களுக்கு அறியத்தந்து இக் கூட்டத்தில் அனைத்து வர்த்தகர்களும் தவறாது சமுகமளித்தல் வேண்டுமென்றும் கூட்ட நேரம் பின்பு அறிவிக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

...ர்த்தக சங்கம்
சுன்னாகம்.

(சி- 9561)

Nallur Branch Library

# அரச செலவினத்தைக் குறைக்க இலங்கை மத்திய வங்கி வற்புறுத்து

## 44 ஆவது ஆண்டறிக்கை விபரம்

(கொழும்பு)

தொடர்ச்சியாக அதிகரித்து வரும் பணவீக்கத்தினை கட்டுப்படுத்த நம்பத்தகுந்ததும் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டதுமான இறை மற்றும் நாணயக் கொள்கைகள் தவிர்க்க முடியாத தேவையாகக் காணப்படுகின்றன என இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை வலியுறுத்தியுள்ளது.

அண்மைய பொருளாதார சீர்திருத்தங்களின் நன்மைகளை உறுதிப்படுத்தவும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொள்கை சீர்திருத்தங்ளுக்கு உயர் வரவேற்பினை பெற்றுக் கொள்ளவும் எதிர்வரும் ஆண்டுகளில் உயர் வளர்ச்சி வேகத்தினை பேணவும் மேற்படி இறை மற்றும் நாணயக் கொள்கைகள் முக்கியம் என்றும் மத்திய வங்கி சுட்டிக் காட்டியுள்ளது,

மத்திய வங்கியின் 44 வது ஆண்டறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது, அண்மைய ஆண்டுகளில் விலைகளின் உறுதியான அதிகரிப்பிற்கு பல சிக்கலான காரணிகள் பங்களிப்பு செய்துள்ள வேளையில் பாரிய இறைப் பற்றாக்குறை மற்றும் நாணயக் கூட்டுக்களின் விரைந்த வளர்ச்சி என்பனவற்றிலிருந்து எழும் உயர்ந்த மட்டத்திலான மொத்தக் கேள்வியே பொருளாதாரத்தின் உறுதியான விலை ஏற்றத்திற்கு முக்கிய காரணியாகும் என இந்த அறிக்கை கூறுகிறது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த கட்டுப்பாடான நாணயக் கொள்கையும் உள்நாட்டுக் கொடு கடனின் கட்டுப்பாடும் அத்தியாவசியமான நிபந்தனைகளாகும் என்றும் அறிக்கை கூறுகிறது. அரச செலவினத்தைக் குறைக்குமாறும் மத்திய வங்கி வலியுறுத்தியுள்ளது.

இறை கட்டுப்பாடானது முதலாவதாக மொத்தக் கேள்வியைக் குறைவடையச் செய்து உள்நாட்டுப் பணவீக்கத்தின் தாக்கத்தைக் குறைக்கும், இரண்டாவதாக அரச செலவினத்தின் குறைப்பும் அரச செலவினத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான அத்தகைய செலவினங்களின் மீளமைப்பும் விலைகளின் தாக்கத்தினைக் குறைவடையச் செய்யும். மூன்றாவது பற்றாக்குறையின் குறைப்பானது உள்நாட்டுக் கடன் பெறுகைக்கான கேள்வியைக் குறைவடையச் செய்து வட்டி வீதம் பணவீக்கம் என்பவற்றின் தாக்கத்தினைக் குறைவடையச் செய்வதன் மூலம் தனியார் துறை முதலீட்டிற்கு மூலவளங்களை விடுவிக்கும்.

மொத்தத்தில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் நாட்டின் தற்போதைய சூழலில் விரும்பப்படும் சேமிப்பு முதலீட்டு மட்டங்களைப் பேணக் கூடிய குறைந்த வட்டிவீதங்களைப் பேணுவதற்கும் ஒரே வழி கடுமையான இறைக் கொள்கையே எனத் தோன்றுகிறது.

பொருளாதாரத்தின் உறுதியான அடிப்படையில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அமைப்பு ரீதியான சீராக்கங்கள் குறிப்பாக வர்த்தகம் மற்றும் நிதியியல்துறை சீராக்கங்களுடன் இணைந்த உறுதியான இறை மற்றும் நாணயக் கட்டுப்பாடுகள் அவசியமாகின்றன தற்போதைய உயர் வளர்ச்சி இயக்க விளைவினைப் பேணுவதற்கு சந்தைச் செயல் முறையின் ஒதுக்கீட்டுத் திறனை மேம்படுத்துவதற்கு அவசியமான தீர்வை மற்றும் நிதித்துறை சீராக்கங்கள் உற்பத்தி விநியோகம் என்பவற்றில் காணப்படும் பல தரப்பட்ட தடைகளின் நீக்கம் என்பவற்றை உள்ளடக்கிய பலதரப்பட்ட கொள்கை வழிமுறைகள் தேவைப்படுகின்றன என்றும் மத்திய வங்கியின் 44 ஆவது ஆண்டறிக்கை கூறுகிறது.

# வழிப்பறித் திருட்டுகள் கொழும்பில் மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

வழிப்பறித்திருடர்கள், முடிச்சு மாறிகள் முதலானோரின் நடமாட்டம் கொழும்பில் கடந்த சில நாட்களாக மீண்டும் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

வெள்ளவத்தை,மருதானை கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, டவுன் ஹோல் பகுதிகளிலேயே வழிப்பறிச்சம்பவங்களும் 'பிற்பொக்கெட்'டுகளும் அதிகரித்துள்ளதாகவும் வழிப்பறிச் சம்பவங்கள் விடியற் காலையிலும் இரவு10 00 மணிக்குப் பின்னரும் பரவலாக இடம்பெறுகின்றன. முன்பின் அறிமுகம் இல்லாதவர்கள் யாராவது இந்த வேளைகளில் வீதியால் சென்றால் பஸ்நிலையங்களில் பஸ்சிற்காக நிற்பது போல் பாசாங்கு செய்யும் சிலர் இவர்களை மிரட்டி அவர்களின் உடைமைகளை 'கிறிஸ்கத்தி' முனையில் பறித்துக் கொண்டு தப்பி விடுகிறார்கள் எனவும் கூறப்படுகிறது.

அண்மையில் மருதானை ஹமீம் லொட்ஜில் தங்கியிருந்தபுத்தளம் வியாபாரி ஒருவர் காலை 6.30 மணியவில் தேநீர் குடிக்க வீதியால் சென்றுகொண்டிருந்த போது திடீரென நெருங்கிய வழிப்பறிப்பேர் வழி ஒருவர் அவரை தடுத்து கத்தியை காட்டி பணம் கேட்ட போது வியாபாரி வழங்க மறுத்துள்ளார் உடனே வழிப்பறிபேர் வழி கத்தியால் வியாபாரியின் கையை குத்தினாராம், இதனையடுத்து பீதியடைந்த வியாபாரி பணத்தை எடுத்து கொடுத்ததும் வழிப்பறிப்பேர் வழி தப்பி தலைமறைவாகி விட்டாராம்,

இதேபோல் வெள்ளவத்தை டபிள்யூ ஏ. சில்வா மாவத்தையில் வயோதிபர் ஒருவரின் உதவியுடன் சென்று கொண்டிருந்த அல்வாயைச் சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவர் அதிகாலை வேளை தனது நகைகளை வழித்திருடர் இருவரிடம் பறிகொடுத்துள்ளார். இவர்களை நெருங்கிய இரு தடியர்கள் அம்மா யாழ்ப்பாணமா? புலியா? என்று கொச்சைத் தமிழில் கேட்டுவிட்டு கழுத்திலிருந்த சங்கிலியைக் கழற்றுமாறு உத்தரவிட்டனராம்

நீங்கள் புலி இல்லையென்றல் சங்கிலிப் பதக்கத்தில் புலிச்சின்னம் பொறித்திருக்காது எனவே அதனைப் பார்க்க வேண்டுமென்று சங்கிலியை வாங்கிக் கொண்டனராம், பின்பு அவரிடமிருந்த பாக்கை திறக்கும்படி கூறிவிட்டு அதற்குள்ளிருந்த சங்கிலி, மற்றும் காப்பையும் எடுத்துக் கொண்டு ஓட முற்பட்டனராம். வயோதிபர் எட்டிப் பிடிக்கவே அவரை அடித்து விட்டு நகைகளுடன் தப்பித்துக் கொண்டனராம்.

## பயிற்சிநெறி விரைவில்

நெசவாளர்களுக்கான பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் 1994 - 96-ம் ஆண்டு காலப்பகுதிக்கான ஈராண்டு கால நெசவுப் பயிற்சி யாழ் நகரிலுள்ள அரசினர் நெசவுப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறிக்கு 18 வயது முதல் 30 வயது வரையிலான இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் எனவும், மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர் நல்லூர் நெசவுப் பயிற்சிப் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

## அனுமதி அட்டைகள்

நாளை ஆரம்பமாகவுள்ள 1993-ம் ஆண்டு க, பொ, த (சாதாரணதரப்)பரீட்சையின் இசை, நடன செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள வடமராட்சிப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் வடமராட்சியில் உள்ள பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு கல்விக் கோட்டங்களுக்கு 27-ம்திகதி வந்து சேர்ந்துள்ளன.

## நயினாதீவிற்கு கப்பல் சேவை

நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு திருகோணமலைக்கும் காரை நகரிற்கும் இடையே விசேட கப்பல் சேவை ஒன்று நடைபெறவுள்ளது.

பிரசித்தி பெற்ற நயினை நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா அடுத்தமாதம்9ஆம் திகதி ஆரம்பமாகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய செயலாளர் நியமனம்

சிறிலங்கா பாராளுமன்ற புதிய செயலாளர் நாயகமாக தித்த வெல்ல தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் செயலாளர் நாயகமாக இருந்த நியால் செனவிரட்ன தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றதைத்தொடர்ந்து இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# முன்னைய ஆட்சியிலும் கலகங்கள் நடந்தன

## பாராளுமன்றில் விமல் விக்கிரமசிங்கா

(கொழும்பு)

இலங்கையில் கோஷ்டி மோதல் காடைத்தனம் துப்பாக்கி கலாசாரம் ஆட்சி புரிவதாக கடந்த சில வாரங்களாக தீவிர பிரசாரம் நடத்தப்பட்டது இதனை ஆராயும் போது 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு ... விவகார அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்

பாராளுமன்றத்தில் பேசிய அவர் 1958 இல் இனக்கலவரமும் 1959 இல் பண்டாரநாயக்கா கொலையும் 1971 இல் இளைஞர்கிளர்ச்சியும் 1977, 1983 ஆம் ஆண்டுகளில் ...

## இலவச நிவாரண விநியோகம்

இடம்பெயர்ந்தோருக்கான சித்திரைமாத நான்கு வார இலவச நிவாரண உலர் உணவுப் பொருள்களாக அரிசி, மாவு, சீனி, பருப்பு ஆகியன வழங்கப்படும் என யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது புதியநிவாரண முத்திரைகள் மக்களுக்க ...

அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

10-வது நாள் கண்ணீர் அஞ்சலி

கூட்டுறவாளன்

அமரர் வே. சின்னத்தம்பி

ஸ்ரீலங்கா அரசின்கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சினால் அகால மரணமடைந்தநீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும்,பிரபல சமூக சேவையாளருமான அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களின் பிரிவினால் கலங்கி நிற்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும், நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தின் பணியாளர்கள் இயக்குநர் சபை உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவர்தம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பணியாளர்கள்,இயக்குநர்சபை உறுப்பினர்கள்,
பொதுச்சபை பிரதிநிதிகள், அங்கத்தவர்கள்.
அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்.
(சி-9543)

27 ஆவது

பிறந்தநாள் வாழ்த்தும்
201-ம் நாள் நினைவஞ்சலியும்



தாயின் மடியில்:
31-5 1967

தாயக மண்ணில் :
11-11-1993

லெப். கேணல்

சூட் / அருணன்

இன்று 'இருபத்தேழ்' வயதுனக்கு ........!
'அருணனென'
வென்ற வரிப்புலியே! 'நாகதேவன்துறை' நொருக்கி
நின்ற நெடும்புலியே........
நின் பிறந்த நாள் கவிதை
நெஞ்சு, விழி கலங்கி நீட்டுகிறோம்!
—எங்களுயிர்க்—

நீங்காத நினைவில் ஆண்டு ஒன்று

(கொழும்பு)

இலங்கையில் கோஷ்டி மோதல் காடைத்தனம் துப்பாக்கி கலாசாரம் ஆட்சி புரிவதாக கடந்த சில வாரங்களாக தீவிர பிரசாரம் நடத்தப்பட்டது இதனை ஆராயும் போது 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு பல தடவைகளில் அரசியல் வன் செயல்கள் இடம் பெற்றுள்ளன என பாராளுமன்ற ... விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் பேசிய அவர் 1958 இல் இனக்கலவரமும் 1959 இல் பண்டாரநாயக்கா கொலையும் 1971 இல் இளைஞர்கிளர்ச்சியும் 1977, 1983 ஆம் ஆண்டுகளில் இனக்கலவரமும் இடம் பெற்றன எனவும் சுட்டிக்காட்டினார்.

... இலவச நிவாரண உலர் உணவுப் பொருள்களாக அரிசி, மாவு, சீனி, பருப்பு ஆகியன வழங்கப்படும் என யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது புதியநிவாரண முத்திரைகள் மக்களுக்கு வழங்கப்பட்ட பின்னரே மேற்படி விநியோகம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிய வருகின்றது. (22)

யாழ் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்

## மலேரியாத் தாக்கம் பெருமளவில் வீழ்ச்சி

யாழ் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் தொகை பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எனினும் யாழ் வைத்தியசாலையில் உள்ள பதிவுகளின்படி மலேரியாவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுதவிர்ந்த பிற பகுதிகளில் மலேரியா நோயினால் பாதிக்கப்படுபவர்களும் யாழ் வைத்தியசாலைக்கே சிகிச்சை பெற வருவதனால் இவ்வைத்தியசாலை பதிவுகளில் இவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதனால் யாழ் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மலேரியா தாக்கம் குறைவடைந்த போதிலும் வைத்தியசாலை பதிவில் பிறபகுதி நோயாளர்களின் பதிவும் இருப்பதால் இத்தொகை யாழ் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகமாக காணப்படுவதற்கு காரணமாக இருப்பதாக வைத்திய வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## கருத்தரங்குகள்

சீதனச் சடைச்சட்டம் பற்றி விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினரால் யாழ் குடாநாடெங்கும் பரவலாக கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன. பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள் மாதர் சங்கங்கள், பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் போன்ற பொது ஸ்தாபனங்களில் இக் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. தமிழீழ மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி, மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி தமிழ்க்கவி ஆகியோர் இக்கருத்தரங்குகளில் கருத்துரைகளைவழங்கிவருகின்றனர். இரவுவேளைகளில் நடைபெறும் கருத்தரங்குகளில் 'சீதனச் சிறை உடைப்போம்' எனும் தெருக்கூத்தும் இடம்பெறுகிறது. (22)

## கண் நோய் பரவுகிறது

(யாழ்ப்பாணம்)

தீவக மக்கள் தங்கியுள்ள அரியாலை டயஸ், நகிரன் குடியிருப்புகளில் மக்களிடையே கண்நோய் பரவி வருகின்றது' இது சிலருக்கு சாதாரண கண் நோயாகவும், சிலருக்கு புதுவிதமானதாக பல நாட்கள் நீடித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது அத்துடன் ஒரு சிலரிடையே காய்ச்சல் பரவியுள்ளதாகவும் கூறப்பட்டது. டயஸ் குடியிருப்பில் மலேரியாவும் சிலரிடையே இருப்பதாக குடியிருப்பு நிர்வாகத்தினர் ... பில் தெரிவிக்கப்பட்டது.

## ஜனாதிபதி விஜேதுங்கவிற்கு அமைச்சர் கூரே புகழாரம்

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தில் கம் உதாவ திட்டங்களுக்காக அரசு 680 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இவ்வளவு பெருந்தொகைப் பணம் வேறு எங்கும் செலவிடப்படவில்லை அவ்வகையில் கம்பஹா மாவட்ட மக்கள் பாக்கியசாலிகள். இதற்காக அவர்கள் ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவிற்கு நன்றி தெரிவிக்க வேண்டும் இவ் ... வீடமைப்பு நிர்மாண ... அமைச்சர் சிறிசேன கூரே ... தெரிவித்தார்

கம்பஹா மாவட்டம் மினுவங்கொட பகுதியில் குணசேவனகம மாதிரிக் கிராம திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில், வறுமையை இந்த மண்ணிலிருந்து விரட்டும் வரை நாம் ஓயப்போவதில்லை அதற்காக மறைந்த தலைவர் ரணசிங்க பிரேமதாசாவின் கொள்கைகளை பின்பற்றிச் செயற்படுவதே தனது லட்சியமாகும் எனவும் தெரிவித்தார்.

## நீங்காத நினைவில் ஆண்டு ஒன்று



### அமரர் கிளேற்றன் நல்லையா

(உரிமையாளர் "ஒளி இல்லம்")

தோற்றம்: 10 - 12 - 1947 மறைவு: 01 - 06 - 1993

அன்னையும் தந்தையுமாய் அருகிருந்து வளர்த்தவரே
அன்பிற்கு இலக்கணமாய் திகழ்ந்தவரே அப்பா-உங்கள்
அழகு முகம் கண்டு ஆண்டு ஒன்று சென்றதுவோ
அணுவளவும் உம்நினைவு அகல வில்லை எம்மை விட்டு.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக புதன்கிழமை (01 06-94) காலை 6 மணிக்கு புனித மரியாள் பேராலயம், புனித யுவானியார் ஆலயம், புனித யாகப்பர் ஆலயம், அருள் ஆச்சிரமம் என்பவற்றில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

16, றக்கா ஒழுங்கை,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.
(8418)

உமது பிரிவால் வாடும்
பிள்ளைகள்.

இன்று 'இருபத்தேழ்' வயதுனக்கு ......!
'அருணனென'
வென்ற வரிப்புலியே! 'நாகதேவன்துறை' நொருக்கி
நின்ற நெடும்புலியே.........
நின் பிறந்த நாள் கவிதை
நெஞ்சு, விழி கலங்கி நீட்டுகிறோம்!
—எங்களுயிர்க்—
குஞ்சு; அதற்குள் நீ கனவாகி இருநூற்றியொரு
நாட்கள் நகர்ந்தனவா?
நிசமாய் நாம் நிலைதளர்ந்து -
நீட்டி அழுதிசைக்கும் நினைவஞ்சலிப்பாட்டுக்
கேட்கிறதா? ''சாவியனே''...... கண்திறவாய்!
'சூட்' எனும் பேர்ச்
செந்தணலே
மீண்டுமெமைச் சிரிக்கவைக்கச் 'சூரியனாய்'
வந்துவிடு; வலியகற்று;
வாசலில் நாம் காத்து உள்ளோம்!
(8423)

ஜெரேஸினா குடும்பம்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 16 - 9 - 1922

மறைவு: 31 - 4 - 1994

### அமரர் செல்லர் முருகேசு

(கிளாக்கர், வேலணை)

கந்தப்புராணக் கருத்துரைகள் சொல்ல
இந்தப்பிறப்பில் இனியாரோ - வெந்து
மனமுருகி வாடும் மனைவி மக்கள் - சுற்றம்
தனைக்காக்க வேவரம் தா

தங்கள் பிரிவால் வாடும்

வேதக் கோயிலடி,
நவாலி
(சி-9547)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர
சகோதரிகள், உறவினர்கள்

# தேசியப்பட்டியல் எம்.பிகளை ஐ.தே.க. ஏன் மிரட்டுகிறது

### மகிந்த ராஜபக்ஷ கேள்வி

(கொழும்பு)

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டுள்ள ஐ.தே.க தேசிய பட்டியல் உறுப்பினர்களை இராஜினாமா செய்யுமாறு நிர்ப்பந்தித்து ஏன் வன்முறைகளை கடைப்பிடிக்கின்றது என அம்பாந்தோட்டை சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வன்முறைமூலமும் கொலை மிரட்டல் மூலமும் பாராளுமன்ற உறுப்பினர்களை பதவி விலக நிர்ப்பந்திப்பதிலிருந்து ஜனநாயகத்திற்கு அக்கட்சி கொடுக்கும் உயர்மரியாதை எவ்வளவு தூரம் அமைந்துள்ளது என அறிந்து கொள்ள வைக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சு.க. தொகுதி அமைப்பாளர் புதிதாக நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர்களாக இருபத்தியொரு பேர் புதியதாக நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்களின் நியமனத்தைக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா வழங்கியதாகவும் தற்போது கட்சி புனர்நிர்மாணம் செய்ய வேண்டியிருப்பதால் இந் நடவடிக்கையைதான் மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மலையக பாடசாலைகளின்

# ஆசிரியர் வெற்றிடம் நிரப்ப அமைச்சர் புதிய திட்டம்

(கொழும்பு)

தோட்டப் பாடசாலைகள் முஸ்லிம்பாடசாலைகள் மற்றும் கிராமப்புறப்பாடசாலைகள் ஆகியவற்றில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப கல்வி கலாசார அமைச்சர் லொக்குபண்டார புதிய திட்டமொன்றைச் செயற்படுத்தவுள்ளார்.

மேற்படி பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசத்தில் அல்லது கிராமசேவையாளர் பிரிவில் உள்ளவர்களைக் கொண்டு இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

ஆசிரியர் பதவிக்கு தகுதியுடையவர்களை போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு செய்யும் அதன் அடிப்படையில் இவ்வெற்றிடங்கள் நிரப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

தற்போது மேற்படி பாடசாலைகளில் அதிகமான வெற்றிடங்கள் உள்ளன வெளியூர்களைச் சேர்ந்தவர்கள் இப்பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டால் அவர்கள் ஒருவருட சேவையைப் பூர்த்தி செய்ய முன்னர் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிடுகின்றனர்.

இடமாற்றம் கிடைக்காதவர்கள் விரக்தியுடன் கடமையாற்றுகின்றனர் இதனால் அப்பகுதிப் பாடசாலைப் பிள்ளைகள் பாதிப்படைகின்றனர் இதற்குப் பரிகாரமாகவே இப்புதிய நடவடிக்கையை அமைச்சு மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது.


யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி

மாணவர் எழுச்சி நாள்

05 . 06 . 1994

"ஏட்டுக்கல்வியில் இன்றுள்ள மாணவர் நாட்டுக்கேபுரம் தாங்கிடும் தூணவர்"

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.


# சிறிலங்கா முழுமையாக ஜப்பானை நம்பியிருக்க முடியாது

### ஜப்பானிய தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் அபிவிருத்திக் கொள்கைகளில் உறுதிப்பாடு இல்லை இலங்கைக்கு ஜப்பான் தொடர்ச்சியாக வழங்கும் உதவிகள் நிபந்தனைக்குட்பட்டவை சிறிலங்கா அரசு முழுவதும் சிநேகித மனோபாவத்தில் ஜப்பானை நம்பியிருக்க முடியாது;

இவ்வாறு கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகம் சிறிலங்கா அரசிற்கு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக சிறிலங்காவிற்கான ஜப்பானிய தூதுவர் மசாக்கி குனிபாசு கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தியுள்ளார்.

மேலும் அவர் அப்பத்திரிகையாளர் மாநாட்டில் சிறிலங்கா அரசும் அதன் மக்களும் சிறிலங்காவின் பொருளாதார நடவடிக்கைகளில்இருந்து விலகியுள்ளதோடு இவ்விடயத்தில் முழுமனதோடு முயற்சிகளில் ஈடுபடுவதில்லை.

இலங்கைக்கு நிதிவழங்கும் நாடுகள் இலங்கையில் பின்வாங்குதலினால் இந்நாட்டிற்கு கிடைக்கும் நிதியுதவியின் அளவு உறுதியாக குறைந்து வருகின்றது இவ்விடயத்தில் ஜப்பானின் பங்கு முக்கியமாகவுள்ளது.

சிறிலங்கா அரசு முழுவதும் சிநேகித மனோபாவத்தில் ஜப்பானை நம்பியிருக்கமுடியாது சிறிலங்கா அரசிடம் அபிவிருத்தி தொடர்பாக கடுமையான முயற்சியை எதிர்பார்க்கின்றோம்; ஏனெனில் சிறிலங்கா அரசின் அபிவிருத்திக் கொள்கையில் உறுதி இல்லை எம்மால் சிறிலங்காவிற்கு வழங்கும் தொடர்ச்சியான நிதியுதவி நிபந்தனைக்கு உட்பட்டது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி தொடர்ச்சியான முயற்சியும் உறுதியான கொள்கையும் கொண்டிருக்கவேண்டும்.

அதிகமான விடுதலை நாட்களை வழங்கும் இலங்கையின் கொள்கை இந்நாட்டுக்கு நன்மைபயக்காது. அடுத்த பிரச்சினை மூளைசாலிகளின் வெளியேற்றம், அதிருப்தி அடைந்த அதிதிறமைவாய்ந்த இலங்கையர்கள் வெளிநாடு செல்வதையும், வெளிநாடு சென்றவர்களை நாட்டிற்கு அழைப்பது தொடர்பாகவும் இலங்கை அரசு என்ன செய்கின்றது?

மனிதவள அபிவிருத்தியை மாறுபடும் சூழ்நிலைக்கேற்ப இலங்கை திருத்தி அமைக்கப்படல் வேண்டும் இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்படும் நிலையிலும் ஜப்பான் நிதியுதவியின் உபயோகம் இந்நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்துவதாக இருக்குமாயின் எமது நிதி இலங்கைக்கு கிடைக்குமெனக் குறிப்பிட்டார்.

# நாட்டை நாம் ஆளமுடியாது; ஆட்சியாளரைத் தீர்மானிக்கமுடியும்

### : தொண்டமான்

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் நாட்டின் சனத்தொகையில் ஐந்து சதவீதத்தினரே யாகும் இந்த நிலையில் நாம் ஆட்சியை அமைக்க முடியாது ஆனால் ஆட்சியை அமைப்பவர் யார் என்பதை எம்மால் தீர்மானிக்க முடியும். எனவேதான் நாம் பெரும்பான்மை இனக்கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். எனினும் எந்த நிலையிலும் எமது தனித்துவத்தை விட்டுக்கொடுத்து விடக்கூடாது இவ்வாறு உல்லாசப்பயண கிராமிய கைத்தொழில் அமைச்சரும் இ.தொ.கா. தலைவருமான சௌ. தொண்டமான் தெரிவித்தார்.

பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்த இணக்கப்பாடு என்பதை நாம் அவர்களுடன் இரண்டறக் கலந்து செயற்படுவதாகவோ அல்லது அவர்கள் கேட்கும்படி எல்லாம் நடக்கவேண்டும் என்பதாகவோ எடுத்துக்கொள்ளக்கூடாது. இ.தொ.காவில் செயலாளர் வேறாக செயற்படுவதாகவும், இ.தொ.கா. விரைவில் ஆட்டம் காணப்போவதாகவும் பிரசாரம் செய்யப்படுகிறது ஆனால் இது வெறும் சலசலப்பு மட்டுமேயாகும் எம்மை அலட்சியம் செய்தவர்கள் கூட இப்போது எமது பின்னே வந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.


வருகின்ற
திங்கள் வரை (6.6.94)
பொறுத்துக் கொள்ளுங்கள்!!

வரலாற்றுக் காலத்துக்கு
உங்களை அழைத்துச்
செல்வதற்கான
தயார்படுத்தலுக்காகவே
இத்தனை தாமதம்!


வெளிநாடு செல்லவிருந்த

# கொழும்பு சென்றயாழ்வாசி பொலிசாரால் கைது

(கொழும்பு)

வெளிநாடு செல்வதற்காக கொழும்பு வந்த பண்டத்தரிப்பு வாசியொருவர் கைதான நிலையில் இப்போது வழக்கை எதிர் நோக்கியுள்ளார். வடலியடைப்பை சேர்ந்த துரைசிங்கம் சந்திரகுமாரன் (38) என்ற தனியார் வாகன சாரதியான இவர் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெறுதற்காக கடந்த ஆகஸ்ட் கொழும்பு வந்திருந்தார்.

பம்பலப்பிட்டி காலிவீதியில் பம்பலப்பிட்டி பொலிஸ்நிலையத்தை கடந்து செல்கையில் இவர் கைது செய்யப்பட்டு அப்பொலிஸ் நிலையத்தில் 3 மாதகாலம் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் மகஸீன் சிறையில் இருந்து வருகிறார் இவர் மீதான விசாரணையை மேல் நீதிமன்றம் மேற்கொண்டு வருகிறது.

# சுவிஸிலிருந்து திரும்பியவர் கொழும்பில் கைது

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தில் ஐந்து வருடகாலம் வாழ்ந்து விட்டு கடந்த ஆண்டில் கொழும்பு திரும்பிய தமிழர் ஒருவர் அண்மையில் கொழும்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

கிருஷ்ணபிள்ளை கணேசலிங்கம் என்னும் இவர் மட்டக்குளியவில் உள்ள அவரது வீட்டில் வைத்து குற்றப் புலனாய்வு பொலிசாரால் கைது செய்யப்பட்டார் எனினும் கைது செய்யப்பட்டதற்கான காரணம் எதுவும் கூறப்படவில்லை.

# கட்டுத்துவக்கு வெடித்து இளம் யுவதி மரணம்

(ஒலுமடு)

நெடுங்கேணி ஒலுமடு என்னும் இடத்தில் கட்டுத்துவக்கு வெடித்து இளம்யுவதி ஒருவர் பரிதாபகரமாக மரணமானார்.

ஒலுமடுவைச்சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயலக்ஷ்மி (வயது 14) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக மரணத்தை தழுவிக்கொண்டவராவார் சம்பவதினம் இவர் தனது வீட்டிற்குப் பின்னால் உள்ள பற்றைக்குள் சென்றபோது காட்டில் மறைத்து பொறியேற்றியிருந்த கட்டுத்துவக்கு வெடித்ததனால் இவரது இரு தொடைகளும் முறிந்துள்ளன.

போக்குவரத்து வசதிகள் இன்மையால் ஒலுமடுவில் இருந்து நெடுங்கேணி வைத்தியசாலைக்கு கொண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டதனாலேயே மரணம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

# மாகாணசபைகள் மீது வெறுப்பு ஏற்படுத்த முயற்சி

### -தென்மாகாண முதலமைச்சர்

தென்மாகாண சபைக்கு தேவையான உத்தியோகத்தர்களை உடனடியாக நியமிக்காது மாகாணசபையின் வேலைத்திட்டங்களை இழுத்தடித்து மாகாணசபைமீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படுத்தும் விதத்தில் அரசு நடந்து கொள்வதாக தென்மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

தேவையான உத்தியோகத்தர்களை நியமிக்காது காலதாமதம் செய்வதால்மாகாண சபையின் அபிவிருத்தி வேலைகளுக்கு முட்டுக்கட்டை ஏற்படுகிறது மாகாணசபையின் வேலைத்திட்டங்களை குழப்பியடிக்க அரசு திட்டமிட்ட வகையில் செயற்படுகிறது.

தென்மாகாணத்திற்கு எம்மை ஆலோசிக்காது மத்திய அரசு இரு பிரதி பொலிஸ்மா அதிபர்களை நியமித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


மாணவர் எழுச்சிநாள்-
யூன் - 5
'கல்வி என்பது மாணவர் விழிகள்
கற்ற வழிசெலின் திறந்திடும் வழிகள்'

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(8427)

தயாரிப்புத்தலுக்காகவே
இத்தனை தாமதம்!

'கல்வி என்பது மாணவர் விழிகள்
கற்ற வழிசெலின் திறந்திடும் வழிகள்'

(8422) யா- புங்குடுதீவு மகாவித்தியாலயம்

## 31-வது நினைவஞ்சலி



எ. றெ: மேரி யுஸ்ரீனா

தாயின் மடியில் 16.09.1991


ஆண்டவன் அடியில் 1.05.1994

மழலை மொழி பேசி கொஞ்சிக் குலாவும்
சின்னஞ்சிறு வயதினிலே கொடிய நோயினால்
எமை எல்லாம் விட்டுப் பிரிந்து
எமை தவிக்கவிட்டு மறைந்தாயே
எங்கள் அன்புச் செல்வமே!
இரண்டரை வருடம் உன் மழலை
மொழி கேட்டு மகிழ்ந்திருந்தோம்
நீ மறைந்து ஒரு மாதம் ஓடி மறைந்ததம்மா
எங்கள் அன்புச் செல்வம் யுஸ்ரீனா!

மணற்காடு குடத்தனை.

உன் பிரிவால் கதறி அழும்
அப்பா- எட்மன்றெஜி

(8426) அம்மா- ஜெயா, உற்றார், உறவினர்கள்.



ஒரு இரண்டு மணிநேர அனுபவம்...
அதை நேரடியாகவே அனுபவித்துக்
கொள்ளுங்கள்.

அந்தயுகத்தில்
பிரவேசிப்பதற்கான
கடவுச்சீட்டுகள்
நங்கூரம் இதழுடன்.

ஏமாற்றத்தைத் தவிர்க்க
புத்தகசாலைகளில் முன் கூட்டியே
சொல்லிவையுங்கள்:

**நங்கூரம்**

அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி-9557)

## பதவி வெற்றிடம்

பொதுமுகாமையாளர் - தரம் 101:6

சம்பளத்திட்டம்- 1305 - 60x4 - 75x11 - 2370.

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 07 வது சம்பளத் திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 08வது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06 வருட அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் காமை மட்டத்திலான பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர் தரம்) க பொ. த. (உயர் தரம்) இல் 03 பாடத்திலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை: 20 — 50 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளருக்கு வயதெல்லையில் விலக்களிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 20 06. 94ஆந் திகதிக்கு முன்பாக 'தலைவர், கட்டைவேலி- நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

தலைவர்

(சி 9546)

Nallur Branch Library

### சிந்தனைக்கு

சிங்கக் கூட்டத்திற்கு ஓர் ஆடு தலைவனாக இருப்பதை விட, ஆட்டுமந்தைக்கு தலைவனாக ஒரு சிங்கம் இருப்பதே சிறந்தது.

- டானியல் டீ:போ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 31-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## தொண்டமானின் இராஜதந்திரம் எதுவரை

அமைச்சர் தொண்டமான் மீண்டும் ஒருமுறை தனது அரசியற் சித்தாந்தத்தை வெளியிட்டுள்ளார். ''இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் நாட்டின் சனத்தொகையில் ஐந்து வீதத்தினரேயாகும். இந்நிலையில் நாம் ஆட்சியை அமைக்க முடியாது. ஆனால், ஆட்சியை அமைப்பவர் யார் என்பதை எம்மால் தீர்மானிக்க முடியும் எனவேதான் நாம் பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம்'' என்பதே அவரது கடைசியான சித்தாந்தமாகும்.

அரசியல்வாதிகள் எப்பொழுதும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக் கூடியவர்களாகவும், மக்களை வழிநடத்துபவர்களாகவும் இருக்க வேண்டும். மக்களை அதைரியப்படுத்துபவர்களாகவும், பலவீனமானவர்களாக்குபவர்களாகவும் [இருக்கக்] கூடாது. ஆனால், அமைச்சர் தொண்டமானின் கருத்தானது, மலையக மக்களை அதைரியப்படுத்துவதோடு, கடந்த கால அரசியலில் பெற்ற பாடத்தினையும் மூடிமறைக்க முற்படுவதாகவும் உள்ளது.

இன்று உலகில் சிறுபான்மை இனங்கள் நடத்தும் விடுதலைப் போராட்டங்களில் அனேகமானவை சிறிய வீதாசாரத்தைக் கொண்ட மக்களால் நடத்தப்படுபவைதான். இதில் பெரும்பாலானவை 10 வீதத்திற்கும் கீழ்பட்ட மக்கள் தொகை கொண்டவர்களால் நடத்தப்படுபவை. எடுத்துக்காட்டாக இன்று இந்தியாவை மூச்சுத்திணறவைக்கும் காஷ்மீர்விடுதலைப் போராட்டம்இந்திய மக்கள் தொகையில் ஒரு வீதத்திற்கும் குறைவான மக்கள் தொகையினராலேயே நடத்தப்படுகின்றது.

இந்நிலையில், போராட்டத்திற்கு மக்கள் தொகையின் விகிதாசாரம் என்பதை விட போராட்டத்திலுள்ள நியாயமும், போராடும் ஆற்றலும், துணிவும் அவசியமாகும் வழிநடத்த திறமையான தலைமையும் அத்தோடு, தெளிவான கொள்கையும் அவசியம். அமைச்சர் தொண்டமான் கூறுவது போன்று, சிறிலங்காவை ஆள்வதென்பது மலையக மக்களைப் பொறுத்து இயலாத காரியம்தான். ஆனால், சிறிலங்காவை ஆள வேண்டும் என அவரை யார் கேட்டார்கள்? அவர் மலையகத்தை, அதாவது தமது மக்கள் பரந்துள்ள

# பாதாள உலகத் தேடலுக்கு தேர்தல் தோல்வியே காரணம்

### எதிர்க்கட்சி உறுப்பினர்

(கொழும்பு)

தென் மாகாண தேர்தலில் ஐ தே க வெற்றி பெற்றிருப்பின் தற்போது மேற்கொள்ளப்படும் பாதாள உலகக் கிரிமினல்கள் பற்றிய விசாரணைகள் ஏதும் இடம்பெற்றிருக்க மாட்டாதென தென்மாகாண சபை உறுப்பினர் சுகத் அத்திரமான தெரிவித்துள்ளார்.

முன்பு பாதாள உலகக் கோஷ்டிபற்றி நாம் பலமுறை கூறினோம். அவ்வாறான கொலைக் கோஷ்டிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையுமாறும் அவர்களது அடடகாசங்கள் பற்றி விசாரணை நடத்துமாறும் கேட்டோம். ஆனால் அதை அரசு செவிமடுக்கவில்லை. தற்போது அரசு பாதாள உலகக் கிரிமினல்களைக் கைதுசெய்ய உத்தரவு பிறப்பித்துள்ளது. அன்று எதிரணியினர் குரல் எழுப்பியது சரியாகிவிட்டதுஎன்பதை மக்கள் புரிந்துகொண்டுவிட்டனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தகுதியானவர் எம்.பியாக தியாகஞ் செய்யத் தயார்

### தேசியப்பட்டியல் எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

தகுதியானவர்கள் பாராளுமன்றத்திற்கு வருவதற்காக எந்தத் தியாகத்தையும் செய்ய ஐ.தே.க. தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் தயாராக இருப்பதாக தேசியப்பட்டியல் உறுப்பினரும் பிரதி அமைச்சருமான எச்.ஆர்.பியசிறி தெரிவித்துள்ளார்:

நாட்டிற்கும், கட்சிக்கும் தேவையானவர்கள் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திற்காகவே தேசியப் பட்டியல் முறை கொண்டு வரப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

## வயோதிபப் பெண்ணை விடுவிக்குமாறு மனு தாக்கல்

(கொழும்பு)

கைதான மகனை பார்க்க கொழும்பு வந்த வேளை கணவருடன் கைதாகி வெலிக்கடை சிறையில் பெண்கள் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுந்தப்போடி அழகம்மா (70)வை விடுதலை செய்யக்கோரி சட்டத்தரணி ஆட்கொணர்வுமனு தாக்கல் செய்துள்ளார்.

பாதுகாப்பு ஒன்றிணைப்பு பிரிவு இயக்குனர் பொலிஸ் மாஅதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலர், வெலிக்கடை சிறைச்சாலை பெண்கள் பிரிவு அத்தியட்சகர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர் மனுவை விசாரணைக்கு ஏற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற பிரதிவாதிகளுக்குபதில் தாக்கல் செய்ய அடுத்தமாதம் 7ஆம் திகதிவரை அவகாசம் வழங்கியுள்ளது.

களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவ் வயோதிபப் பெண்ணின் கணவனும் மகனும் தற்போது மகளின் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## சதையை அரிக்கும் இருமி; லண்டனில் ஆய்வு ஆரம்பம்

### முடிவு அறிவிக்கப்படுமென ஜோன் மேஜர் உறுதி

சதையை அரித்து உண்ணும் கிருமி பற்றி லண்டனில் பொது சுகாதார ஆய்வு கூடங்களில் தீவிர ஆய்வுகள் நடைபெறுகின்றன ஆய்வுகளின் முடிவின் பின் அறிக்கை வெளியிடப்படும் என பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் அறிவித்துள்ளார்.

மக்கள் பதற்றமடையக் கூடாது நோயைவிட வதந்தி வேகமாக பரவுகிறது. சாதாரண இருமல் கூட தொற்று நோய் என அஞ்சப்படுவதாக லண்டனில் உள்ள பொதுசுகாதார ஆய்வுகூட சேவையைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இங்கிலாந்து வடபகுதி குளாஸ்டர்ஷியவிலிருந்து இந்நோய் பற்றி முதலில் அறிவிக்கப்பட்டது வருடத்திற்கு 30 முதல் 40 பேர்வரையில் இந்நோயினால் பீடிக்கப்பட்டவர் எனவும் அரைப்பகுதியினர் இறந்துவிட்டதாகவும் ஜேர்மன் சுகாதார அதிகாரிகள தெரிவித்தனர். 1992 இலிருந்து இதுவரைநெதர்லாந்தில் 21 பேர் இறந்துள்ளதாகடச்சு தேசிய சுகாதார சூழல் பாதுகாப்பு நிறுவனம் அறிவித்தது. இதுபோன்ற நோயினால் கடந்தவருடம் 17 பேர்பாதிக்கப்பட்டதாகவும் எவரும் இறக்கவில்லை எனவும் பெல்ஜிய சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். இவ்வருடம்பிரிட்டனில் ஏழுபேர் இறந்துள்ளனர்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 05.31
செவ்வாய் இரவு

08.01 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08.10 - அறிந்துகொள்ளுங்கள் - தகவற்களஞ்சியம்
08.20 - நலந்தானா - நிகழ்ச்சியில் புகைத்தலினால் ஏற்படும் தீங்குகள் பற்றிய ஆலோசனைகள்
08.30 - செய்திகள்
08 40 - கருத்துக்களம் - ''கட்டுப்பாடு''
08.50 - களமும் கானமும் - அன்று எம் கருவி காத்தவன் இன்று சிலையாகிப் போய்விட்டான்.

1994.06.01
புதன் காலை

07.02 - மாவீரவணக்கம்
07 15 - நீங்கள் கேட்டவை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07 40 - நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## உள்ளூர் உணவுப்பொருட்களை முழுமையாகப் பயன்படுத்தவேண்டும்

### மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

உள்ளூரிலே போசாக்கு மிக்க உணவு வகைகள் இருக்கும் போது போசாக்கு உணவு வகைகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படவேண்டும் என எதிர்பார்த்திருப்பது கவலைக்குரியதாகும் ''உள்ளூரிலே உள்ள போசாக்கு மிக்க உணவுவகைகளை முழுமையாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் இங்கு திறந்து வைக்கப்பட்டுள்ள ''சத்துணவுக்கூடம்'' இப்பகுதி மக்கள் உள்ளூரில் உள்ள போசாக்கு உணவுவகைகளை முழுமையாகப் பயன்படுத்த வழிவகுக்க வேண்டும்''

மேற்கண்டவாறு, பருத்தித்துறை பிரதேச செயலக போசாக்குகுழுவும், வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து அமைத்துள்ள சத்துணவுக் கூடத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல் குறிப்பிட்டார் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி சத்துணவுக் கூட பெயர்ப்பலகையைத்திரை நீக்கம் செய்துவைத்தார் முதலில் தமிழீழ பொருண்மிய மேம்

## கடல் வளம் சார்ந்த போட்டி முடிவுகள்

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடாத்தப்பட்ட உற்பத்தி எழுச்சிவாரப் போட்டியில் காரைநகர், தீவக ஒன்றிய மட்டங்களில் இடம் பெற்ற கடல்வளம்சார் போட்டிகளில் வெற்றியீட்டியோருடைய பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

காரைநகர் ஒன்றிய போட்டி முடிவுகள்:-

நீச்சல் போட்டி
முதலாம் இடம்:- நல்லையா பேரின்பநாயகம் சிறீமுருகன் சி க, ச. அமைப்பு
இரண்டாம் இடம்:- தம்பிராசா லோகநாதன் அம்பேக்கார் க. ச. அமைப்பு
மூன்றாம் இடம்:- ஐயன் நவரெத்தினம் அம்பேக்கார் க, ச அமைப்பு

வள்ளம் தாங்கல் போட்டி:-

வலை பின்னுதல் போட்டி
முதலாம் இடம்:- அ யுவானிஸ் மொறாயஸ் ஊர்காவற்துறை க ச அமைப்பு
இரண்டாம் இடம்:- கணபதி மாசிலாமணி சின்னமடு க ச அமைப்பு
மூன்றாம் இடம்:- சபாபதி புவனேந்திரன் சின்னமடு க ச அமைப்பு
(மெலிஞ்சிமுனை க ச அமைப்பு)

கயிறு இழுத்தல் போட்டி:-
முதலாம் இடம்:- யுவானிஸ் மொறாயஸ் ஊர்காவற்துறை க ச அமைப்பு
இரண்டாம் இடம்:- கு. ரவி ஊருண்டி க ச அமைப்பு
மூன்றாம் இடம்:- செ. லிங்கராசா ஊருண்டி க ச அமைப்பு

சர் தொண்டமான் கூறுவது போன்று, சிறிலங்காவை ஆள்வதென்பது மலையக மக்களைப் பொறுத்து இயலாத காரியம்தான். ஆனால், சிறிலங்காவை ஆள வேண்டும் என அவரை யார் கேட்டார்கள்? அவர் மலையகத்தை, அதாவது தமது மக்கள் பரந்துள்ள மலையகத்தை ஆள்வது பற்றியல்லவா சிந்திக்க வேண்டும்.

இதேசமயம், அமைச்சர் தொண்டமான் கடந்த கால இலங்கை அரசியல் வரலாற்றையும் மறந்து பேசுகின்றார். இலங்கை 'சுதந்திரம்' அடையமுன்னர் இலங்கையில் இருந்த சில தமிழ் அரசியல்வாதிகள் இலங்கையை நாமே ஆள்வோம் என எண்ணியிருந்தனர். ஆனால், அது கனவாகிப் போன பின்னர் உருவாகிய தலைமை சிங்கள அரசியற் கட்சிகளுக்கு ஒத்துழைப்பதன் மூலம் அதாவது தமது பேரம் பேசும் ஆற்றல் மூலம் தமிழரின் உரிமைகளை நிலைநாட்டி விடலாம் எனக் கருதினர்.

ஆனால், நடந்தது என்ன? காலத்திற்குக் காலம் தேர்தல்களின்போது பேரம் பேசப்பட்டதாயினும் தேர்தலின் பின்னர் சிங்களக் கட்சிகள் மாற்றியே வந்தன. ஆட்சிக்கட்டில் ஏறும்வரை தமிழ் தலைவர்களை அரவணைத்தவர்கள் பின்னர் இவர்களைத் திரும்பிப் பார்க்கவே இல்லை. இந்நிலையானது, 12வீதமான மக்களை கொண்ட இலங்கைத்தமிழருக்கே நடந்ததென்றால் 5 வீத மக்களைக் கொண்ட மலையகத் தமிழ் மக்களுக்கு நடக்காதென தொண்டமான் கூறுவது யதார்த்தத்திற்குப் புறம்பானதாகும்.

அதிலும், இன்றுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையில் பதவிக்கு தெரிவு செய்யப்படும் வரையிலேயே வாக்காளர் பற்றிய தேவை உண்டு. பதவி ஏற்ற பின்னர் சர்வவல்லமை பொருந்தியவராக அவர் மாறிவிடுகின்றார். இந்நிலையில், வாக்களித்தவர்களும், உதவியவர்களும் அவரின் தயவை வேண்டி நிற்க உள்ளதே ஒழிய அவர் எவரையும் தாங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. இதனை அமைச்சர் தொண்டமானுக்கு நாம் கூறித்தான் தெரிய வேண்டும் என்ற மந்த புத்தியும் அவருக்கில்லை.

இந்நிலையில், அமைச்சர் தொண்டமான் வெளிப்படுத்தும் இராஜதந்திரம் ஏற்கனவே தோற்றுப் போனதொன்றுதான்- இது மலையகத் தமிழ்மக்களைப் பலவீனப்படுத்துமே ஒழிய ஒருபோதும் அவர்களின் அரசியல் உரிமையைப் பெற்றுக் கொடுக்காது ஆனால், இதனை அமைச்சர் தொண்டமான் புரியாமல் இருக்க நியாயமில்லை ஏனெனில் அவர் கூறுவது போன்றே நீண்ட அரசியல் அனுபவம் கொண்டவர் அவர். அவ்வாறு இருந்தும் இந்நிலையென்றால், தான் இறக்கும் வரை ஒர் அமைச்சுப் பத[illegible] மலையக மக்களின் உரிமைகளை விட்டுக் [illegible]யார் என்பதைத் தவிர எண்ணுவதற்கு வேற[illegible]

கன சி க, ச. அமைப்பு
இரண்டாம் இடம்:- தம்பிராசா லோகநாதன் அம்பேக்கார் க. ச. அமைப்பு
மூன்றாம் இடம்:- ஐயன் நவரெத்தினம் அம்பேக்கார் க, ச அமைப்பு

வள்ளம் தாங்கல் போட்டி:-
முதலாம் இடம்:- பொன்னன் அருச்சுனன் ஊரி க. ச அமைப்பு
இரண்டாம் இடம்:- ஐயன் நவரெட்ணம் அம்பேக்கார் க ச. அமைப்பு
மூன்றாம் இடம்;- வேலுப்பிள்ளை கணேசன் ஊரி க. ச. அமைப்பு

பாய் வள்ளம் ஓட்டுதல் போட்டி.
முதலாம் இடம்:- நடராசா தேவராசா அம்பேக்கார் க ச அமைப்பு
இரண்டாம் இடம்:- தம்பு உருத்திரகுமார் அம்பேக்கார் க ச அமைப்பு
மூன்றாம் இடம்;- சின்னத்துரை கோமதன் ஊரி க ச. அமைப்பு

வலை பின்னுதல் போட்டி.
முதலாம் இடம்:- தம்பிமுத்து வடிவேலு அம்பாள் க: கூ. சங்கம்
இரண்டாம் இடம்:- தங்கராசா நாகேஸ்வரி அம்பாள் க. கூ. சங்கம்
மூன்றாம் இடம்:- பரமு குமாரவேலு அம்பாள் க கூ சங்கம்

கயிறு இழைத்தல் போட்டி.
முதலாம் இடம்;- தங்கராசா நாகேஸ்வரி அம்பாள் கூ சங்கம்
இரண்டாம் இடம்:- சுப்பிரமணியம் சிவராசா அம்பாள் கூ. சங்கம்
மூன்றாம் இடம்:- தம்பிமுத்து வடிவேலு அம்பாள் கூ சங்கம்

துடுப்பு வலித்தல் போட்டி.
முதலாம் இடம்:- வேலுப்பிள்ளை கிருஷ்ணசாமி அம்பாள் கூ. சங்கம்
இரண்டாம் இடம்:- செல்வநாயகம் கங்காதரன் அம்பாள் கூ. சங்கம்
மூன்றாம் இடம்:- தம்பு முகுந்தன் அம்பாள்கூ. சங்கம்

தீவக ஒன்றிய போட்டி முடிவுகள்:-
நீச்சல் போட்டி.
முதலாம் இடம்:- பிரான்சிஸ் சேவியர் மெலிஞ்சிமுனை க ச அமைப்பு
இரண்டாம் இடம்:- கு லபீந்திரன் ஊருண்டி க ச அமைப்பு
மூன்றாம் இடம்:- தம்பிராசா செந்தில் குமார் தம்பாட்டி க ச அமைப்பு

வள்ளம் தாங்கல் போட்டி.
முதலாம் இடம்:- கு. லபீந்திரன் ஊருண்டி க ச அமைப்பு
இரண்டாம் இடம்:- கிருஸ்தோ லக்ஸ்மன் மெலிஞ்சிமுனை க ச அமைப்பு
மூன்றாம் இடம்:- சபாபதி புவனேந்திரன் சின்னமடு க ச அமைப்பு

பாய் வள்ளம் ஓட்டுதல் போட்டி.
முதலாம் இடம்:- பிரான்சிஸ் சேவியர் மெலிஞ்சிமுனை க ச அமைப்பு
இரண்டாம் இடம்:- கந்தையா சாந்தலிங்கம் ஊருண்டி க ச அமைப்பு
மூன்றாம் இடம்:- யாக்கோப்பு சீரனி இம்மானுவேல்

முதலாம் இடம்:- யுவானிஸ் மொறாயஸ் ஊர்காவற்றுறை க ச அமைப்பு
இரண்டாம் இடம்:- கு. ரவி ஊருண்டி க ச அமைப்பு
மூன்றாம் இடம்:- செ. லிங்கராசா ஊருண்டி க ச அமைப்பு

துடுப்பு வலித்தல்
முதலாம் இடம்:- கு லபீந்திரன் ஊருண்டி க. ச அமைப்பு

ஏனைய பிற உற்பத்தி சார் போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம்:-

தோட்டம் கொத்துதல்.
முதலாம் இடம்:- இராயப்பு தர்மதாஸ் சாம்சன் குடியிருப்பு அரியாலை
இரண்டாம் இடம்:- சந்தியகு அலிஸ்ரன் மாட்டின் சாம்சன் குடியிருப்பு அரியாலை
மூன்றாம் இடம்:- கந்தையா கிருஸ்மி ஸ்ரீபன் குடியிருப்பு யாழ்.

பனை மரம் ஏறுதல்
முதலாம் இடம்:- வீரசிங்கம் இரத்தின சிங்கம் சாம்சன் குடியிருப்பு அரியாலை
இரண்டாம் இடம்:- பொன்னுத்துரை யாகப்பர் சாம்சன் குடியிருப்பு அரியாலை
மூன்றாம் இடம்:- பிரான்சிஸ் சிவராசா சாம்சன் குடியிருப்பு அரியாலை

குட்டான் இழைத்தல்
முதலாம் இடம்:- ஆ புஷ்பராணி சாம்சன் குடியிருப்பு அரியாலை
இரண்டாம் இடம்:- சூசை மரியதாஸ் சாம்சன் குடியிருப்பு அரியாலை
மூன்றாம் இடம்:- கி. செபஸ்ரின் ஸ்ரிபன் குடியிருப்பு

கிடுகு பின்னுதல் போட்டி
முதலாம் இடம்:- சி தெய்வானை சாம்சன் குடியிருப்பு அரியாலை
இரண்டாம் இடம்:- மா. யோகநாதன் சாம்சன் குடியிருப்பு அரியாலை
மூன்றாம் இடம்:- சூசை மரியதாஸ் சாம்சன் குடியிருப்பு அரியாலை

கயிறு திரித்தல்
முதலாம் இடம்:- அன்னலெட்சுமி அந்தோனி சாம்சன் குடியிருப்பு அரியாலை
அஞ்சலா யேசுதாசன் சாம்சன் குடியிருப்பு அரியாலை
சுதா யேசுதாசன் சாம்சன் குடியிருப்பு அரியாலை
இரண்டாம் இடம்:- அன்ரன் விஜயகுமார் சாம்சன் குடியிருப்பு அரியாலை
தேவமலர் செல்வேந்திரன் சாம்சன் குடியிருப்பு அரியாலை
அல்வினம்மா பாக்கியம் சாம்சன் குடியிருப்பு அரியாலை
மூன்றாம் இடம்:- புஸ்பலதா கந்தசாமி சாம்சன் குடியிருப்பு அரியாலை
தயா கந்தசாமி சாம்சன் குடியிருப்பு அரியாலை
அ யோகேஸ்வரி சாம்சன் குடியிருப்பு அரியாலை

இதில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் கோட்டமட்டத்தில் வைத்து வழங்கப்பட இருக்கிறது.

பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி சத்துணவுக் கூட பெயர்ப்பலகையைத்திரை நீக்கம் செய்துவைத்தார் முதலில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வடமராட்சி இணைப்பாளர் திரு. வளவன் தமிழீழ தேசிய கொடியை ஏற்றிவைத்தார் தொடர்ந்து பிரதேச செயலர் திரு சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் போல் குறிப்பிட்டதாவது.

இன்று போசாக்குக்குறைவினால் எமது பகுதி மக்கள் பல்வேறு வகைகளிலும் பாதிப்படைந்துசொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் இவர்களுக்குப் போசாக்கு நிறைந்த உணவுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் சிறுவர்கள், மாணவர்களின் போசாக்கு நடவடிக்கைகளில் அதிக அக்கறை எடுக்கப்பட வேண்டும் இன்று இங்கு திறந்து வைக்கப்பட்ட சத்துணவுக்கூடம்போன்றகூடங்கள் பல பாடசாலைகளுக்கு அருகாமையிலும் திறக்கப்பட வேண்டும் இப்பகுதியின் போசாக்கு நடவடிக்கைகளில் பிரதேச செயலர் திரு. சிவசுவாமி மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டியன ''சத்துணவுக்கூடம்'' ஒன்று முதன்முதலாகத் திறந்துவைக்கப்பட்டிருப்பது மிக மகிழ்ச்சிக்குரியதாகும் நாம் போசாக்கு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தத்தவறினால் அது எமது சமுதாயத்தை பேரழிவுக்கு இட்டுச்செல்லும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது போசாக்கு உள்ள உணவு வகைகள் பற்றிய பிரசாரங்களை மக்கள்மத்தியில் மேற்கொள்ள வேண்டும்இதன் மூலம் உள்ளூரின் போசாக்கு உணவுவகைகளை மக்கள்முழுமையாகப் பயன் படுத்தி இன்று நிலவும் போசாக்கின்மையை நீக்கி எதிர்காலத்தில் திடகாத்திரமான நாட்டிற்குகந்த மக்களை உருவாக்க முடியும் என்றார். 22)

Nallur Branch Library



# மலையக எதிரணி தொழிற்சங்கங்கள் எதிர்க்கட்சியுடன் பேச்சுவார்த்தை

## தேர்தல் கூட்டு குறித்து ஆராய்வு

(கொழும்பு)

மலையகத்தின் பல எதிரணி தொழிற் சங்கங்கள் பொது ஜன ஐக்கிய முன்னணியினருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தெரியவருகிறது. இப்பேச்சுக்கள் அனைத்தும் எதிர்வரும் பொதுத் தேர்தலை மையமாகக் கொண்டே நடத்தப்படுவதாகவும் பேச்சுகளின் போது பொதுஜன ஐக்கிய முன்னணியினர் சார்பில் எவ்வித முடிவுகளும் தெரிவிக்கப்படவில்லையென கூறப்படுகிறது.

இதுவரை பேச்சுவார்த்தை நடத்தியுள்ள எதிரணி தொழிற்சங்கங்களில் மூன்று தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியலில் இடம் பிடித்துவிட முயல்வதாக தெரிகிறது. இது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி தரப்பில் எவ்வித முடிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதே வேளை மலையகத்தின் முன்னணி தொழிற் சங்கத்தைச்சேர்ந்த முக்கியஸ்தர் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# கொள்ளைக் கோஷ்டியில் பூநகரி சிப்பாய்கள்

(கொழும்பு)

இராணுவ சீருடையில் கொள்ளை முயற்சிஒன்றில் ஈடுபடத்தயாராகி கொண்டிருந்த கோஷ்டியை வந்துரம்ப பொலிசார் கைதுசெய்துள்ளனர். கைதான இக்கோஷ்டியில் பூநகரியிலிருந்து தப்பி வந்த இருஇராணுவ சிப்பாய்கள் பாடசாலை மாணவர் ஆகியோரும் அடங்குவர்.

இவர்களிடமிருந்து கைக்குண்டுகள் விளையாட்டுத்துப்பாக்கி, கத்தி என்பன கைப்பற்றப்பட்டன. தென் மாகாணத்தில் நடைபெற்ற பல கொள்ளைகளை இக்கோஷ்டியே மேற்கொண்டதாக கூறப்படுகிறது மாவரல பகுதியில் நடைபெற்ற ஒன்றரை லட்சம் ரூபா கொள்ளையையும் இக்கோஷ்டியே நடத்தியுள்ளது.

# நிவாரணப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தவர்களுக்கான ஏப்ரல் மாதத்திற்கான இலவசஉலர் உணவுப் பொருட்களை சகலபல நோ. கூ. சங்கங்களும் விநியோகிக்கஆரம்பித்துள்ளதாக தெரியவருகின்றது.

மேற்படி மாதத்திற்கான நான்கு கிழமைகளுக்குமான உலர்உணவுப் பொருட்களும் சேர்த்து ஒரேதடவையில்வழங்கப்படுவதாக தெரியவருகின்றது.

இடப்பெயர்ந்தவர்களிடம் உள்ள ஏற்கனவே வழங்கப்பட்ட உலர்உணவு முத்திரைகளின் அடிக்கட்டைகளைச் சமர்ப்பித்து ஏப்ரல்மாதத்திற்கான உலர்உணவுப் பொருட்களை இடப்பெயர்ந்தவர்கள் பெற்றுக் கொள்ள முடியுமென தெரியவருகின்றது

இதற்கிடையில் மே மாதத்திற்குமான நான்கு கிழமைக்குமுரிய உலர்உணவுப்பொருட்களையும்மிகவிரைவில் வழங்க யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (பா)

# பெண்ணை விரும்பி வராது விட்டவன் பொன்னை விரும்பி வருவது கேவலம்

# எம். பி. பதவியை பறித்தால் நீதிமன்றம் செல்லத் தயங்கேன்

## தேசியப்பட்டியல் உறுப்பினர் காலிங்க ஒபயவன்ச

(கொழும்பு)

தேசியப்பட்டியல் எம். பி பதவியிலிருந்து தன்னை தனது விருப்பத்திற்கு மாறாக நீக்கினால் கட்சி தலைமைப் பீடத்திற்கு எதிராக நீதிமன்றம் செல்லப்போவதாக ஐ தே க தேசியப்பட்டியல் உறுப்பினர் காலிங்க ஒபயவன்ச தெரிவித்துள்ளார்.

தேசியப்பட்டியல் எம். பி களை கட்சித் தலைவர்கள் விலக்குவதற்கு சட்டத்தில் இடமில்லை அவ்வாறு விலக்கினாலும் தேர்தல் ஆணையாளர் ஏற்றுக்கொள்ளமாட்டார். நான் பதவி துறக்கத் தயார். ஆனால் நான் முன் வைத்த நிபந்தனை நிறைவேற்றப்படவேண்டும். திருமதி ஹேமா பிரேமதாசாவை எம். பியாக்கி அமைச்சர் பதவியும் வழ... வதானால் நான் எம். ப... பதவியைத்துறக்கத் தயார் ... நிபந்தனையில் எவ்வித ... றமும் இல்லை என கா... ஒபயவன்ச தெரிவித்தார்.

# மைலாப்பூர் தேர்தல் முடி... ஆணையாளரால் நிறுத்த...

மைலாப்பூர் சட்டமன்றத் தேர்தல் தொகுதிக்கான முடிவுகள் வெளியிடப்படுவதை தேர்தல் ஆணையகம் ஒத்தி வைத்துள்ளது; இத் தேர்தலின் போது முறைகேடுகள் இடம் பெற்றதாகவும், ... குப் பெட்டிகள் திறந்த ... யில் காணப்பட்டதாக ... எதிர்க்கட்சிகள் புகார் ... திருந்தது தெரிந்தது இ... புகார்கள் விசாரணை ... தப்படுவதாகவும் அது ... தேர்தல் முடிவுகள் வெ... டப்படக்கூடாது எனவும் ... தல் ஆணையகம் உத்... பிறப்பித்துள்ளது.

# இந்நாட்டை நாம் இழந்தால் கடலில்தான் குதிக்கவேண்டும்

## ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா

(கொழும்பு)

இந்த நாட்டில் வாழும் உரிமையை நாம் இழந்தால் வேறு எங்கும் சென்று வாழ முடியாது கடலில் குதித்துச் சாகவேண்டிய நிலை தான் எமக்கு ஏற்படும். எனவே நான் இருக்கும்வரை இந்த நாட்டை பிரிக்க இடம் கொடுக்கமாட்டேன் என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்

உடுநுவர தேர்தல் தொகுதியில் மக்கள் வங்கியின் கிளையொன்றை திறந்துவைத்து உரையாற்றுகையில் மேற்படி தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், இது சிறிய நாடு இங்கு வாழும் உரிமையை நாம் இழந்துவிட்டால் எமக்கு வாழுவதற்கு வேறு நாடு இல்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்

மேலும் அவர் தெரிவிக்கையில், நான் ஆட்சியில் இருக்கும்வரை நாடு பிரிவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன் இதனை யாவரும் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்

# பேராதனை மாணவர் விடுதியை ஊழியர் விடுதிக்கு மாற்றும் யோசனை கைவிடப்பட்டது

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக மாணவர்களின் விடுதிப் பிரச்சினையை தீர்க்குமுகமாக ஊழியர்களின் விடுதியை மாணவர்களின் விடுதியாக மாற்ற உயர் கல்வி அமைச்சு தெரிவித்த யோசனைக்கு ஊழியர் தொழிற் சங்கங்கள் ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து அந்த முயற்சி கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

180 லட்சம் ரூபா செலவில் தற்போது கட்டப்பட்டு வரும் மாணவர் விடுதிக் கட்டட வேலைகள் பூர்த்தியாகும் வரை மாணவரை தங்க வைப்பதற்காக பல்கலைக்கழக நிர்வாகம் தற்போது தனியார் வீடுகள் சிலவற்றை வாடகைக்கு எடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இப்போது 3 வீடுகள் மட்டுமே வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளன. மேலும் பல வீடுகள் வாடகைக்கு எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கற்பிட்டிப் பகுதியில் மீனவரின் படகுகள் இயந்திரங்கள் கடத்தல்

புத்தளம் கற்பிட்டி பகுதியில் உள்ள உச்சமுனை பகுதியில் 28-ம் திகதி அதிகாலை இனம் தெரியாத நபர்களினால் மீன்பிடி இயந்திரங்களும் மீன்பிடிப்படகுகளும் கடத்தப்பட்டதுடன் மீனவர் ஒருவரும் கடத்தப்பட்டுச் சென்றதாக கொழும்புசெய்திகள் தெரிவிக்கின்றன

ஒவ்வொன்றும் முப்பத்திஇரண்டு ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த ஐம்பது இயந்திரங்கள், நான்கு மீன்பிடி படகுகள் என்பன இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டதாக மேலும் தெரிய வருகின்றது-

### கடறவை

இராசவேல் (வயது 19), மகாலிங்கம் பேரின்பநாயகம் (வயது 19) என்ற ஐந்து மீனவர்களுமே கடலில் காணாமல்போயுள்ளார்கள். அவர்களோடுசேர்ந்து தொழிலுக்கு சென்ற சகமீனவர் ஒருவர் நீந்திக் கரை சேர்ந்துள்ளார் மேலும் பல மீனவர்கள் தமது தொழில் உபகரணங்களை இழந்த நிலையில் கரைசேர்ந்...

### சிறியரக

வண்ணம் எம்மை நோக்கி வந்தனர். துப்பாக்கி வேட்டுக்களின் போது சன்னங்கள் எமது கட்டுமரத்தை தாக்கியதால் நாம் மூவரும் கடலில் குதித்து நீந்தினோம்.

இவ்வாறு நீந்திக் கரைசேர்...

### யாழ் இந்து

கல்லூரியின் பிரதி அதிபருக்கும் இடையில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன இவ்விடயத்தில் கல்வித்திணைக்களத்தின் அழுத்தம் அதிகரித்துச் சென்றதைத் தொடர்ந்து இரு நேரப்பாடசாலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பிரதி அதிபர்கள் தீர்மானித்தனர் நேற்று முதல் இத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்ட போது மாணவர்கள் மட்டத்தில் எதிர்ப்புக் கிளம்பியது

மாணவர்கள் தமது எதிர்ப்பைத்தெரிவித்துமகஜர்ஒன்றை பிரதி அதிபர்களிடம் நேற்றுக்காலை கையளித்தனர் இம் மகஜரில் கல்லூரி அதிபர் மீண்டும் பதவி ஏற்கும் வரை...

### நவம்பர்

த்து திருமதி சந்திரிகா எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது

### இரு தேர்தல்கள்

தாகஇருக்கும்எனவும் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க இரு தேர்தல்களையும் ஒருமித்து நடத்துவதே தேவையற்ற நெருக்கடிகளை தோற்றுவிக்குமென தெரிவுக்குழுவிடம் தேர்தல் திணைக்களம் கருத்துக் கூறியுள்ளது அத்துடன் இரு தேர்தல்களையும் ஒருமித்து நடத்த வசதியாக வாக்களிப்பு நேரத்தை நீடிக்கும் வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டுமெனவும், இரு தேர்தல்களுக்கும் வாக்களிப்பு ஒருமித்து நடத்தும் போது அது வாக்காளர்க்கு மேலதிகப் பழுவாக இருக்கும் எனவும் தேர்தல் திணைக்களம்சுட்டிக்காட்டியுள்ளது

### சிறிலங்கா

தேவையான இந்த இயந்திரத்தை அங்கு கொண்டு செல்வதில் பிரச்சினைகள் ஏதுமில்லை என சிறிலங்கா தூதரகம் அவரிடம் கூறியுள்ளது அடுத்த தடவை தமது விஜயத்தின் போது இந்த லேஸர் இயந்திரத்தை யாழ் கொண்டுவர மேயர் சின்னமணி திட்டமிட்...

### ஜனாதிபதி

குறித்த காலத்தில் ... தேர்தல்கள் நடத்தப்ப... மென ஆளும் கட்சி... டாரங்களில், கூறப்படுகி...

இரு தேர்தல்களையும் ... றாக நடத்துவது குறி... இணக்கப்பாட்டிற்கு ஐ... கவும், சுதந்திரக் கட்சியு... திருப்பதாகவும் மேலும் ... படுகிறது இது தொட... பத்திரிகைக்கு கருத்து ... யிட்ட சுதந்திரக் கட்சி... கொழும்பு மாவட்ட பா... மன்ற உறுப்பிரான நி... சிறிபாலடி சில்வா கூ... யில் இரு தேர்தல்களை... ஒருமித்து நடத்துவ... தான் விரும்புவதாகவும் ... வித்துள்ளார்

### 60 வெளிநாட்டு

கொழும்பு பகுதிகளில் க... யாற்றுகின்றனர். எம். ... எப் குழுவைச் சேர்ந்த... வெளிநாட்டவர்கள் இல... யில் பணியாற்றுகின்ற...

ஐ நா அகதிகளுக்கான ... ஸ்தானிகராலயத்தில் 3... ளூர் வாசிகளுடன் வெ... டவர்கள் சிலரும் பணிய... கின்றனர் இவ்வமை... களைச் சேர்ந்தவர்களை... வேறு சில அரச சா... நிறுவனங்களும் இலங...


**DIPLOMA IN NURSING**

தாதிப் பயிற்சியில் டிப்ளோமா

புதிய நெறி ஆரம்பம்:-

0 -06-1994

- இலகு பயிற்சி நெறி
- சிறந்த விரிவுரையாளர் குழு
- விசேட செய்முறை வகுப்புக்கள்
- இலவச ஆங்கில, பாமஸி வகுப்புக்கள்.

இலவச ஆங்கில, பாமஸி வகுப்புக்கள்.


விபரங்களுக்கு:-

NORTH CEYLON

**TECHNICAL INSTITUTE**

14, St. PETER'S LANE.

JAFFNA.

(சி-9555)


## 3-ம் வருட நினைவஞ்சலி

பிறப்பு:

30 - 6 - 1974

வீரச்சாவு:

31 - 5 - 1991



### வீரவேங்கை ராகுலன்

### [குமாரசாமி குகானந்தன்]

தமிழீழ மண்ணுக்காக ஆனையிறவுச் சமரில் வீரகாவியம் படைத்த மாவீரனை நினைவு கூருகின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

96, ராகுலன் வீதி,
ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.

[8429]


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


தொழில் உபகரணங்களை இழந்த நிலையில் கரைசேர்ந்துள்ளனர்.

மேலும் இத் தாக்குதல் சம்பவத்தின் போது கடற்படையினருக்கு உதவியாக காரைநகர் கசூர்னா பீச், தாப்பில்பிட்டி காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து அகோர எறிகணை வீச்சினையும், கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர் சுழிபுரம் பகுதியின் கடலோரங்களை அண்மித்த இடங்களிலும், கரையோரப் பகுதிகளிலும் மேற்படி எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. இச் சம்பவத்தினால் கரையில் நின்ற மீனவர்கள் தகுந்த பாதுகாப்பிடங்களை நாடியதால் உயிர்ச் சேதங்கள் ன்றி தப்பித்துக் கொண்டனர் எனத் தெரியவருகிறது. (41)

### தலைண்டிக்குளம்

ஊடாக மன்னார் பெரும் நிலப்பரப்பிற்குச் செல்வதற்கு இராணுவத்தின் அனுமதியை கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா - மன்னார் வீதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்காஇராணுவத்தினர் வாகனங்கள் மூலம் பொருள்கள் எடுத்துச் செல்வதற்கான அனுமதி மறுப்பினால் மடு அகதிமுகாம் மக்கள் நீண்டகாலமாக பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர் (தி, சி)

### 5 குடும்பங்கள்

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம் ஊடாக அழைத்து வரப்பட்ட 65 அகதிக் குடும்பங்களுக்கு மட்டுமே இப்பணம் நான்காயிரம் ரூபா வீதம் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இந்த அகதிகள் பற்றிய விபரங்கள்யாழ். செயலகத்தின் புனர்வாழ்வுப் பிரிவினரால் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (தி), (சி)

குதித்து நீந்தினோம்.

இவ்வாறு நீந்திக் கரைசேர்ந்தவரான காரைநகரைச் சேர்ந்தவரும் சுழிபுரம் மேற்கில் வசித்து வந்தவருமான சுப்பையா கோடீஸ்வரன் [வயது 27] என்ற மீனவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

சுழிபுரம் திருவடி நிலைக்கும் காரைநகர் தன்னாமுனைக்கும் இடைப்பட்ட கடற்பிரதேசத்தில் டிஸ்கோ வலைத் தொழிலில் ஈடுபட்டிருந்தோம் அந்த வேளை நள்ளிரவு 1. 10 மணி போல் அங்கு எம்மை நோக்கி சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தவண்ணம் கடற்படையினர் வருவதைக்கண்ட நாம் மூவரும் எமது கட்டுமரத்திலிருந்து குதித்துகரையை நோக்கி நீந்த ஆரம்பித்தோம் இந்தவேளை எனக்கு பின்னால் எனது சகாக்கள் இருவரும் ஏதோ கதைத்தபடி நீந்தி வந்தனர் அப்போது காரைநகரிலிருந்தும் கலிபர் வேட்டுக்கள் எம்மை நோக்கி வந்ததை அடுத்து அவசர அவசரமாக நீந்த ஆரம்பித்தேன் என் பின்னால் வந்த எனது சகாக்கள் இருவர் கதி என்ன ஆயிற்று என்று என்னால் கூறமுடியாமல் உள்ளது அத்தோடு பிறிதொரு கட்டுமரத்தில் தொழிலில் ஈடுபட்டிருந்த மூன்று மீனவர்களுடன் மொத்தம் ஐந்து மீனவர்கள் பற்றியும் கூறமுடியாத நிலையில் உள்ளதாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மேலும் வேறொரு கட்டுமரத்தில் சென்ற மீனவர்களான த. மோகன், ந. புவிராசா ஆகிய இருவரும் சகல தொழில் உபகரணங்களையும் இழந்த நிலையில் மயிரிழையில் உயிர் தப்பி கட்டுமரத்துடன் கரை சேர்ந்துள்ளனர். இச்சம்பவத்தின்போதுகாணாமற்போன ஐவரின் கட்டுமரங்கள்உட்பட மீன்பிடிஉபகரணங்கள்காணாமல் போயுள்ளதாகவும் தெரியவருகின்றது (41

மகஜரில் கல்லூரி அதிபர் மீண்டும் பதவி ஏற்கும் வரை அவர்விருப்பத்திற்கிணங்க ஒரு நேரப்பாடசாலையாக இயங்கவேண்டும் எனக்கோரிக்கை விடுக்கப்பட்டதோடு, இது பற்றிய சாதகமான முடிவினை நாளைபுதன்கிழமைக்குமுன் தரும்படியும்கேட்கப்பட்டிருந்தது

இவ்விடயம் குறித்து நேற்று நடை பெற்ற அதிபர்களுக்கான கூட்டத்தின் போது இக் கல்லூரியின் பிரதி அதிபர் பிரஸ்தாபித்தார் இவ்வேளையில் கல்விப் பணிப்பாளர் செல்வி பெரியதம்பி ''பாடசாலைக்கு வராத மாணவர்களை விட்டுவிட்டுபாடசாலைக்கு வரும்ஒரு மாணவனுக்காகவாவது பாடசாலையை இருநேரமாக நடாத்துங்கள்'' என்று கூறியதாகத் தெரியவருகின்றது

அதிபர்களுக்கான கூட்டம் முடிந்ததும் பாடசாலைக்குச் சென்ற பிரதி அதிபர் கல்விப் பணிப்பாளர்கொடுத்தபதிலை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார்

இதைத் தொடர்ந்து நேற்று மாலை நேரப்பாடசாலைக்கு மிகக்குறைந்தளவிலான மாணவர்களே சமுகமளித்தனர்

தமது விருப்பத்துக்கும், அதிபரின் விருப்பத்துக்கும் மாறாக நடைமுறைப் படுத்தும் இரு நேரப் பாடசாலை என்ற திட்டத்தைக் கைவிடும் வரை தாம் பாடசாலையை இன்று முதல் முழுமையாக பகிஷ்கரிக்கப் போவதாக மாணவ முதல்வர்கள் தெரிவித்தனர்

இவ்விடயம் குறித்து ஏற்கனவே இக்கல்லூரியின் பெற்றார் ஆசிரியர் சங்க செயற்குழு விரிவான ஆலோசனை நடத்தியது இவ் ஆலோசனையின் பின்னர் இரு நேரப் பாடசாலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்த முடியாமைக்கான காரணங்களை விளக்கி கல்வித்திணைக்களத்துக்கு மகஜர் ஒன்று அனுப்பி இருந்தது தெரிந்ததே (க), (ஜி)

ரத்தை யாழ் கொண்டுவர மேயர் சின்னமணி திட்டமிட்டுள்ளார்.

### வீரச்சாவு

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர்மோதலின் போது விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் லவன் | கிள்ளிவளவன் எனும் போராளிககு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

வேறு சில அரச சா
நிறுவனங்களும் இலங்
சேவையாற்றுகின்றன

### மேமாதத்தி

என்றும் பதினெட்டு
ஊர்காவல் படையைச்
தவர்என்றும்தெரிவித்து

இதேவேளை இந்த ம
விடுதலைப் புலிகளின் தா
தல் அதிகரித்து இருப்பதின
படையினரின் இறப்பும்
தலாக இடம்பெற்றதாக
இம் மாதம் இருபத்தி எ
பேர் கொல்லப்பட்டதாக
பாதுகாப்பு வட்டாரங்
சுட்டிக்காட்டியுள்ளன.


**யாழ் ஸ்ரீதரில்**

**இன்று முதல்**

புருஸ்லி நடித்த

**GAME OF DEATH**

தினசரி பி. ப. 4. 00 மணி, மாலை 6. 00 மணி
சனி, ஞாயிறு காலை 10. 30 மணி,
பி. ப. 4. 00 மணி, மாலை 6. 00 மணி

தினசரி பி. ப. 2. 30 மணிக்காட்சி மட்டும்

ஏப்ரல் 94 ஒளிவீச்சு (சி-9548)


## சிலம்பை யாழி

சிலம்பை யாழி வித்தைகளுக்கு பொறுப்புவாய்ந்த கணேஸ் அவர்களது மாணவர்களின் சிலம்ப வித்தைகள் பயங்கர தீப்பந்த வீச்சுக்கள் மந்திகை கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் இன்று 31-5-94 இல் நடைபெறும்.

சோட்டோக்கான் கராட்டி

அசோஸி... த்தித்துறை.

(சி-9560)